20.06.2025
Vol: 41 Issue : 15

வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!

ரூ.20

# பாலஜோதிடம்

எண்கள்

BALAJOTHIDAM ENNGAL

ஆசிரியர் : முருகு பாலமுருகன்



## அடுத்த தலைமுறையை உருவாக்கும்

## சனிபகவான்

# பாலஜோதிடம்

வார இதழ் எண்கள்

## ஜோதிட வாசகர்களின்

### எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் ஒரே ஜோதிட வார இதழ்!




சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| 1 வருடம் | ரூ 900 | 52 இதழ்கள் |
| 3 வருடம் | ரூ 2,300 | 156 இதழ்கள் |
| 5 வருடம் | ரூ 3,300 | 250 இதழ்கள் |

**அனைத்து விதமான ஜோதிட சாஸ்திரங்களை வழங்கும் பாலஜோதிடம் இதழுக்கு சந்தா செலுத்தி தொடர்ந்து இணைந்திருங்கள்!**

தொடர்புக்கு : 89398 82466
96770 91385 • 044 - 26881800

Advt



# கடனில்லா வாழ்வு தரும்
# கற்பக விநாயகர்!

உங்கள் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளுக்கு தனது ஜோதிட அனுபவம் மூலம் பதிலளிக்கிறார்

ஆசிரியர்:
**முருகு பாலமுருகன்**

கேள்விகளை அனுப்ப வேண்டிய வாட்சப் எண்:
**98417 71188**

எந்த ஒரு செயலை தொடங்கினாலும் கணபதியை வழிபட்டுத் தொடங்க காரியம் கைகூடும்..

கணபதி நம் இஷ்ட தெய்வம் மட்டுமல்ல... இஷ்டப்படி வணங்கும் தெய்வமும்கூட! சக்தி விநாயகர், செல்வ விநாயகர் என...

தொடர்ச்சி 8 - ஆம் பக்கம்...

# அடுத்த தலைமுறையை உருவாக்கும் சனி பகவான்

நவகிரகங்களில் சூரியனைவிட்டு வெகு தொலைவில் இருக்கக்கூடிய கிரகம் சனிபகவான். இவரின் தசா வருடம் 19 ஆண்டுகள். ஒருவரின் ஜாதகத்திலுள்ள கர்மவினைக்கு ஏற்ப பலன்களை வழங்கக்கூடிய வல்லமை படைத்தவர் சனிபகவான். இவரின் பணியாட்கள் ராகு- கேதுகள். இவர் ஜாதகக் கட்டத்தை அது பூமியை சுற்றிவர எடுத்துக் கொள்ளக்கூடிய கால அளவு 30 ஆண்டுகள். அதனால் தான் நம்ம முன்னோர்கள், ‘30 ஆண்டுகள் வாழ்ந்தவர்களும் இல்லை 30 ஆண்டுகள் தாழ்ந்தவரும் இல்லை’ என்று சொல்லி வைத்தார்கள்.

எதற்கும் அஞ்சாதவர்களைக்கூட சனிபகவான் தனது கோட்சாரம் மற்றும் தசா புக்தி காலங்களில் ஒரு நாளாவது சோதிக்காமல் விடமாட்டார். ஏழரைச் சனி காலத்தில் சிவனே திருவோடு ஏந்தி பிச்சை எடுத்தாக ஒரு புராணக் கதை அனைவரும் அறிந்த ஒன்று.

தனது தசாபுக்தி காலங்களிலும் ஏழரைச்சனி, அஷ்டமச் சனி, அர்த்தாஷ்டமச் சனி, கண்டகச் சனி காலங்களிலும் வாழ்க்கை பாடத்தை நியாய தர்மத்தை சுற்று கொடுப்பார். இந்த சோதனையை கடந்து சாதனையாளராக வலம்வருபவர்களும் இருக்கிறார்கள். அதிலிருந்து மீளமுடியாதவர்களும் இருக்கிறார்



பிரசன்ன ஜோதிடர் ஐ. ஆனந்தி

கள். இது ஒருபுறம் இருக்கட்டும். குரு வட்டத்திற்கு சுய ஜாதகத்திலுள்ள குறைபாடுகளை நீக்கும் சக்தி உண்டு. ராகு- கேது மற்றும் சனி வட்டம் பிறவி ஜாதகத்திலுள்ள கர்மவினைகளுக்கு ஏற்பவே இருக்கும்.


புராண கதைகளில் பலர் 100 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து மறைந்ததற்கான சான்றுகள் உள்ளன. தற்போது உலகம் முழுவதுமுள்ள வயோதிகர்களை கணக்கு எடுத்தால் 100 வயதுவரை வாழ்பவர்கள் மிக சொற்பமாகவே இருப்பார்கள்.

தற்போது சராசரியாக மனிதனின் ஆயுட் காலம் 70 ஆண்டுகளாக உள்ளது. குறைந்தது ஒரு மனிதனின் ஜாதகத்தை இரண்டுமுதல் மூன்றுமுறை சனிபகவான் சுற்றி வருவார்.

ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை ஆண்டுகள் சஞ்சரிக்கும் சனிபகவான் தான் நின்ற பாவகம் மற்றும் காரகம் ராசியில் நின்ற கிரகத்திற்கு ஏற்ப தன் பலனை வழங்குவார்.

**0-10 வயது**

ஜாதகர் பிறந்த முதல் பத்து வருடம் குழந்தை பருவம். சுய ஜாதகத் தில் சனிபகவான் பலம்பெற்றால் நல்ல பெற்றோர்கள் கிடைப்பார்கள். முழுமையான தாய்- தந்தையின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும். பண்பு, பாசம், நல்ல மனநிலை, மூளை வளர்ச்சி, சமுதாய விழிப்புணர்வு நிம்மதியான உறக்கம் போன்றவை கிடைக்கும். சனி பலம் குறைந்தால் பெற்றோர்களின் அனுசரணை கிடைக்காது அல்லது





ஆயுள் ஆரோக்கிய குறைபாடு இருக்கும்.

### 10-20 வயது

பத்து முதல் இருபது வயதுவரை கல்வி பருவம். முறையான கல்வி கற்று சமுதாயத்தில் தனக்கென ஒரு தனித்தன்மையை நிரூபிக்கும் காலம். சனி பலம் பெற்றால் நல்ல கல்வி கிடைக்கும். படித்த படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்கும். நல்ல சிந்தனை, ஆத்ம ஞானம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். குடும்பத்தின் புகழுக்கு புகழ் சேர்ப்பார்கள். நீதி, நேர்மை, நியாயம், தர்மம் ஆகியவற்றை முறையாகக் கடைபிடிப்பார்கள். பூர்வபுண்ணிய பலம், குலதெய்வ அருள் நிரம்பி இருக்கும். குலத்தினர் ஒற்றுமையாக இணைந்து குலதெய்வம் கும்பிடுவார்கள். குடும்பம் வாழையடி வாழையாக தலைக்கும். செல்வமும் செல்வாக்கும் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

சனி பலம் குறைந்த நிலையில் ஜாதகம் இருந்தால் இந்த வயதோட்டத்தில் பள்ளி, கல்லூரி படிப்பில் தடை ஏற்படும். சுய ஜாதகத்தில் புதனும் 4-ஆம் அதிபதியும் வலிமையாக இருந்தால் மீண்டும் படிப்பை தொடரக்கூடிய சூழ்நிலை உருவாகும். இல்லையெனில் படிக்காமல் அடிமைத் தொழிலில் கஷ்ட ஜீவனம் செய்ய நேரும். சிலருக்கு இந்த வயதில் திருமணம் நடந்து அடுத்த தலைமுறையை உருவாக்குவார்கள்.

### 20-30 வயது

இனம்புரியாத சந்தோஷம் குடிபுகும். மனதிற்கு இன்பம் கொடுக்கும் சம்பவங்களை மட்டும் அனுபவிக்க விரும்பும் காலம். எதிர்பாலினத்தினர்மீது ஈர்ப்பை உண்டாக்கும். எதைப் பார்த்தாலும் அழகாகக் காட்சிதரும். காசு, காமம், காதல், ஆடை, அலங்காரம், சிற்றின்ப நாட்டத்தில் ஈடுபாடு ஏற்படும் காலம். ஆடம்பரமாக சொகுசாக வாழ விரும்பும் காலம். மனம் சார்ந்து உணர்ச்சிப்பூர்வமாக

செயல்படுவதையே விரும்புவார்கள். மனம் எல்லைகளில்லாமல், கட்டுப்பாடற்று தன் போக்கில் பயணப்பட விரும்பும். தன் விருப்பத்துக்கு தடையாக இருப்பவற்றை யெல்லாம் தகர்த்தெறியவும் துடிக்கும். தடைகளை விதிப்போர்மீது வெறுப்பையும் உமிழும். ஆனால், அத்தடைகளை உண்மையில் எதற்காக பெரியவர்கள் நமக்கு விதிக்கின்றனர். அவர்களின் எச்சரிக்கை வார்த்தைகளில் பொதிந்துள்ள உள் அர்த்தம் என்ன என்பதை அலசி ஆராய்வது அவசியம்.

தற்காலத்தில் பிஞ்சிலேயே பழுத்த பழமாக தவறான காதலில் 13, 14 வயதிலேயே மாட்டி தன் வாழ்வை தொலைக்கும் குழந்தைகளே அதிகம். இந்த கலிகாலத்தில் ஒருவனுக்கு தவறான காதல் உணர்வு வராவிட்டால் அவனுக்கு சமுதாயம் வேறு பெயர் சூட்டி அவமானப்படுத்துகிறது. படிக்கும் காலத்தில் தவறான எண்ண அலைகளை மனதில் விதைக்க கூடாது. காதல் மற்றும் திருமணத்திற்கு உரிய காலம். சனி நன்றாக அமையப்பெற்ற வருக்கு சிறப்பான திருமண வாழ்க்கை இந்த காலகட்டத்தில் கூடி தேடிவரும்.

சனியின் முதல் சுற்று முடியும் இந்த காலம் 25 வயதுவரை ஆடிய ஆட்டத்திற்கான எதிர் விளைவை அனுபவிக்கும் நேரம். 20 வயதுவரை வாழ்க்கையில் துன்பத்தை அனுபவித்தவர்களுக்கு ஒரு சுற்று முடியும் நேரத்தில் வசந்தம் வீசத் துவங்கும். பிறவியில் இருந்து துன்பத்தை சந்திக்காதவர்களுக்கு ஆயுள், ஆரோக்கிய பாதிப்பு, தொழில் இடர் போன்ற அசுப பலன்கள் உருவாகும். அதனால் பெரியவர்கள் பேச்சு வழக்கில், '30 வருடம் வாழ்ந்தவரும் இல்லை 30 வருடம் தாழ்ந்தவரும் இல்லை' என்பார்கள். அதாவது 30 வருடமும் எந்த துன்பமும் இல்லாது வாழ்ந்த மனிதரும் இல்லை. 30 வருடமும் இன்பமாக வாழ்ந்தவரும் இல்லை என்பதே இதன் பொருள். சராசரியாக ஒரு மனிதனின் ஆயுட்காலத்தை குறை ந்தபட்சம் 60 வருடம் என நிர்ணயம் செய்தால் 30 வருடகாலம் சனிபகவானின் பிடியில் மட்டுமே மனிதர்களின் வாழ்க்கை இருக்கும்.

சுய ஜாதகத்தில் லக்னம், லக்னாதிபதி வலிமையாக இருந்தால் எந்த மன சஞ்சலத்திற்கும் இடம் கொடுக்காமல் படிப்பிற்கு தகுந்த தொழில் அல்லது வேலையில் சேர்ந்து சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவார்கள்.

பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடந்து முன்னோர்களின் ஆசீர்வாதத்தால் அடுத்த தலைமுறை 27 வயதில் தலைக்கும். அதிகப்படியாக 70 சதவிகிதம் 25 முதல் 30 வயதில் புதிய தலைமுறை உருவாகிவிடும். ஒருவருக்கு வாரிசு உருவாகுவது சாமானியமான செயல் அல்ல. ஒருவருக்கு வாரிசு உருவாகும் நேரமே சிசு உருவாகும் நேரமே கர்ம பலனை தீர்மானிக்கிறது. ஒரு ஆன்மா கர்ம பலனை அனுபவிக்கும் காலம் வரும்போது மட்டுமே பிறப்பெடுக்கும். ஒருவரின் ஜாதகம் என்பது கரு உருவான நேரமா அல்லது குழந்தை பிறந்த நேரமா? பூமியில் ஒரு உயிர் ஜெனித்த நேரம் அதாவது பிறந்த ஜாதகரின் விதிப் பயனை கூறும். கரு உருவான நேரம் என்பது ஆன்மாவின் பிறப்பின் ரகசியத்தை கூறும். அதாவது தந்தைவழி கர்ம வினையைத்தாங்கி கரு உருவாகி றதா? தாய்வழி கர்ம வினையைத் தாங்கி கரு உருவாகிறதா என்பதை அறிய முடியும். நல்ல நேரத்தில் கரு உருவாகவேண்டும் என்பதற்காகத்தான் திருமணத்திற்கு இணையாக முக்கியத்துவம் கொடுத்து திருமண முகூர்த்தம் குறிக்கும்போது, சாந்தி முகூர்த்தத்திற்கும் நல்ல நேரம் பார்த்து குறிப்பர். நல்ல நேரத்தில் தம்பதிகள் மகிழும்போது, நல்ல குழந்தைகள் பிறப்பர். காலம் தவறி உறவுகொண்டு பிறக் கும் பிள்ளைகளால் பிரச்சினைதான் எழும்.

அப்படி நல்ல நேரத்தில் ஒரு கரு உருவாக கிரகங்களின் ஒத்துழைப்பு

# சந்திராஷ்டம தினங்கள்

**மிதுனம்:** *14-6-2025 அதிகாலை 5.38 மணிமுதல் 16-6-2025 பகல் 1.10 மணிவரை சந்திராஷ்டமம். நீங்கள் நல்லதாக பேசினாலும் அதனை மற்றவர்கள் தவறாக புரிந்துகொள்வார்கள் என்பதால் முடிந்தவரை பேச்சைக் குறைப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக்கொள்வது, வெளிப் பயணங்களில் கவனமாக இருப்பது சிறப்பு. முடிந்தவரை கொடுக்கல்- வாங்கல் விஷயத்தில் நிதானத்தோடு செயல்பட்டால் வீண் இழப்புகளைத் தவிர்க்கலாம். முருகனை வழிபடுவது நல்லது.*

**கடகம்:** *16-6-2025 பகல் 1.10 மணிமுதல் 18-6-2025 மாலை 6.35 மணிவரை சந்திராஷ்டமம். குடும்பத்தில் கணவன்- மனைவியிடையே ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல்லாம் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடிய நேரமாகும். எளிதில் முடியவேண்டிய காரியங்கள் தாமதமாகும். உடல்ரீதியாக பாதிப்பு, அலைச்சல், டென்ஷன் ஏற்படும். நீங்கள் பெரிதும் நம்பியவர்களே உங்களுக்கு மனநிம்மதி குறைவை ஏற்படுத்துவார்கள். புதிய முயற்சிகளைத் தள்ளிவைப்பது உத்தமம். பைரவர் வழிபாடு நன்மை தரும்.*

**சிம்மம்:** *18-6-2025 மாலை 6.35 மணிமுதல் 20-6-2025 இரவு 9.45 மணிவரை சந்திராஷ்டமம். உங்களின் பொருளாதாரநிலை சிறப்பாக இருந்தாலும் வீண் பிரச்சினையால் உங்கள் மன அமைதி குறையும். குடும்ப விஷயங்களை வெளிநபர்களிடம் பேசாமல் இருப்பது நல்லது. பெண்கள்வழியில் தேவையில்லாத நெருக்கடி ஏற்படும். சிலருக்கு வயிறு பாதிப்புகள் ஏற்படலாம் என்பதால் உணவு விஷயத்தில் சற்று கட்டுப்பாடோடு இருப்பது நல்லது. சிவன் ஸ்தலங்களுக்கு சென்றுவருவதுமூலம் கெடுதிகள் குறையும்.*


**கன்னி:** *20-6-2025 இரவு 9.45 மணிமுதல் 22-6-2025 இரவு 11.03 மணிவரை சந்திராஷ்டமம். நீங்கள் எதிலும் நிதானமாக செயல்படவேண்டிய நேரமாகும். பிள்ளைகள்வழியில் வீண் மனக்கவலைகள் ஏற்படலாம். பெரியவர்களிடம் பேசுகின்றபொழுது பேச்சில் பொறுமையோடு இருப்பது நன்று. எதிர்பார்த்த பணவரவுகள் கிடைப்பதில் தடங்கல்கள் உண்டாகும். பொருளாதார நெருக்கடி இருக்கும் என்பதால் கொடுக்கல்- வாங்கல் விஷயத்தில் சிந்தித்துச் செயல்படவும். மகாவிஷ்ணுவை வழிபடுவது உத்தமம்.*

*வேண்டும். தம்பதிகள் பழகும் நேரத்தில் அவர்களின் மனநிலை எவ்வாறு உள்ளதோ அதுவே குழந்தையின் கர்ம வினையை நிர்ணயிக்கும். ஒருவரின் ஜாதகத்தில் சனி நின்ற நட்சத்திராதிபதி உங்கள் லக்ன ரீதியான கேந்திர திரிகோண அதிபதிகளில் சாரமாக இருந்தால் பிறக்கப்போகும் குழந்தையால் மகிழ்ச்சி உண்டு. சனி என்ற நட்சத்திராதிபதி உங்கள் லக்னரீதியான 6, 8, 12-ஆம் அதிபதிகளுடன் சம்பந்தப்பட்டால் பிறக்கப்போகும் குழந்தையால் மன உளைச்சல் உண்டு. தம்பதிகள் பழகும் நாட்களில் உங்கள் சுய மற்றும் கோட்சார சனிபகவான் சாதகமாக இருந்தால் பிறக்கும் குழந்தையின் வாழ்க்கை சுகமாக இருக்கும். தம்பதிகள் பழகும் நாட்களில் உங்கள் சுய மற்றும் கோட்சார சனிபகவான் சாதகமற்று இருந்தால் பிறக்கும் குழந்தையின் வாழ்க்கை அசுபமாக இருக்கும். குழந்தைகளால் வலியை உணர்த்துபவரும் சனி பகவான். அந்த பிரச்சினைகளில் இருந்து மீளும் வழியை காட்டுபவரும் சனிபகவான் தான்.*

தொடரும்....

செல்: 98652 20406

3-ஆம் பக்க தொடர்ச்சி...



# கடனில்லா வாழ்வு தரும் கற்பக விநாயகர்!

விருப்பப்படி விநாயகரின்
பெயரைச் சூட்டி வழிபடலாம்..
காக்கும் கடவுள் கணேசனை
நினைத்தாலே நினைத்தது பலிக்கும்..
விநாயகரை வழிபட்டு
வீணாய் போனவன் யாருமில்லை..
வினைகளைத் தீர்க்கும் விநாயகன்
விஸ்வரூப வெற்றிக்கு விதை...

விநாயகரை வழிபட
ஊர் ஊராக அலைய வேண்டிய
அவசியமில்லை..
நம் விருப்பத்திற்கு
எங்கும் வைத்துக்கொள்ளலாம்..
வீட்டின் பூஜையறை இருக்கும்
கன்னி மூலையில்
வெள்ளை எருக்கு விநாயகரை
வைத்து வழிபட
ஏக தோஷமும் நீங்கும்..
குல சாமியை வழிபட
குறிப்பிட்ட நாள் உண்டு..
கணபதியை வழிபட
நாளும் கோளும் தேவையில்லை..

விநாயகரை வழிபடுவதற்கு
விடியற்காலையே சிறந்தது..
விதியை மாற்றும் வல்லமைகொண்ட
விநாயகரை அனுதினமும் வழிபட
எந்நாளும் நன்னாளாகும்..
பிரம்ம முகூர்த்தத்தில் வழிபட
பிரச்சினை அற்ற பிறவிப் பயனை
நீ அடைவாய்..
தலைவழியே தண்ணீர் ஊற்றி
நனைந்த தேகத்துடன்
நெற்றியில் விபூதி இட்டு
அரச மர விநாயகரை சுற்றிவந்து
ஒன்பது முறை தோப்புக்கரணம் போட்டு
ஒரு மணி நேரம் உட்கார்ந்து வந்தால்
பிள்ளைப் பேரு நிச்சயம் உண்டு..
அறிவியலாய் கேட்டால்..
ஆண்களுக்கு விந்தனு கெட்டிப்படும்
பெண்களுக்கு கர்ப்பப்பையில்
இருக்கும் பூச்சிகள் அழியும்..
அரச மர காற்று கர்ப்பப்பையை
வலுவாக்கும்..
அகங்காரமாய் ஆதாரம் கேட்டுத்தான்
நாம் நம்மிடம் இருந்த
மருத்துவத்தை தொலைத்தோம்..
கலாசாரம் மறந்து
கடவுளையும் தொலைத்தோம்..
கண் கெட்டபிறகு
சூரிய நமஸ்காரம் வேண்டாம்!
சூரியனே வழிபடும்
கணபதியிடம் சரணடைய
சகலமும் வெற்றியாகும்...


“விதிப் படிதான் நடக்குது”
“கடவுள்தான் காப்பாத்துவாரு”
இந்த இரண்டு நம்பிக்கையில்தான்
நம் வாழ்க்கை நகர்கிறது..
எந்த சாமி கும்பிட்டா
நமக்கு நல்லது நடக்கும்னு
வேண்டாத தெய்வம் இல்ல..
செய்யாத பரிகாரம் இல்லன்னு
சொல்லி புலம்புறவங்கதான் அதிகம்..
இனிமேல் என்ன நடக்கப் போகிறது
என்று தெரியவில்லை..
விரக்தியா? வேதனையா?!
என்னன்னு சொல்ல தெரியல
நான் நினைச்சதுக்கு
இதுவர எதுவும் நடக்கல..
இனி என்ன பண்றதுன்னு தெரியல...
அடுத்த வேளைக்கு என்ன செய்வது?!
என்ன சொல்வதென்று தெரியவில்லை
என்பவர்களை..
அடுத்தடுத்து சிறப்பாக மாற்றும்
வல்லமைமிக்க
விநாயகரை வழிபட்டு சென்றால்
அனைத்து காரியமும் வெற்றிபெறும்...

கலங்காதே?!..
கடன் பட்டார் நெஞ்சம்போல்
கலங்கினான் என்பதெல்லாம் மாறி
கடன் கொடுக்கும் வள்ளலாவான்



நையாண்டிச் சித்தர் க. காந்தி முருகேஷ்வரர்

கற்பக விநாயகர்..
கடன் கொடுத்தவனுக்கு கட்டம் சரியில்லை
கடன் வாங்கியவனுக்கு
காலம் சரியில்லை..
கௌரவம் தொலைத்து
காவல் நிலையம் போய் விட்டாலும்..
நாணயமாய் வாழ
விநாயகரை நம்பி வழிபட்டால்
உன்னைப் பிழைக்க வைப்பார்..
கடன் கொடுக்கும்போதும்
கடன் வாங்கும்போதும்
கற்பூரம் கையில் ஏற்றி வழிபட
கடன் பிரச்சினையின்றி
காலமும் நேரமும் கைகூடும்..
நீ பிறந்த மாதத்தில்
கல்கண்டு பொங்கல் வைத்து
வருடமொருமுறை வணங்கிவர
கடனில்லா வாழ்க்கை கட்டாயம் கிடைக்கும்...
பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்
உன் குடும்பத்தைக் காப்பார்...



ஏழரைச்சனி காலத்தில்
சகல சங்கடங்களும் சரமாரியாய் வரும்..
எந்தப் பக்கம் திரும்பினாலும்
எல்லோரும் எதிரி ஆவார்..
ஏன் பிறந்தோம் என்று விரக்தியாகி..
தற்கொலை சிந்தனை வரை போகும்..
சித்தம் கலங்கி நிற்கும்போது
சித்தி விநாயகரை வழிபட...
சித்தர் பார்வை பட்டு
சிதறிப் போனதெல்லாம்
சில நாட்களில் மீண்டும் வரும்..
தோப்புக்கரணம்
தொடர்ந்து ஏழு வாரம்
நீ போட்டு வழிபட்டால்..
தொடர் தோல்விகளும் வெற்றியடையும்..
அவ்வளவுதான் வாழ்க்கை முடிந்துவிட்டது
என்றெண்ணும் போதெல்லாம்
ஏகாதசி விரதமிருந்து
ஏழு பேருக்கு அன்னதானம் வழங்க
எடுத்த காரியம் ஜெயமாகுமப்பா...

ஆதிக் கடவுள், ஆதிமூலம்
முதன்மைக் கடவுள்
அற்புதமாய் வாழ வழிசெய்வார்..
குலதெய்வம் தெரியாதவரும்
விநாயகரை வழிபட்டுவந்தால்
இழந்த சொந்தத்தையும்
சொத்தையும் திரும்பப் பெறமுடியும்...
பல்லாயிரம் ஆண்டுகளாய்
பரம்பரை பரம்பரையாய்
பக்தி குறையாமல் வழிபட்ட
விஸ்வரூப விநாயகர்..
விரல் பிடித்துக் கூட்டி செல்வார்

மங்காத செல்வம்பெற
மாதம் இருமுறை
அருகம்புல் மாலையிடு..

வினை முடிக்கும் விநாயகனின்
மூஞ்சூரை மும்மாதம் வழிபடு..
சந்தனக் காப்பு
உன் சந்ததியை காப்பாற்றும்..
கிழமைகள் கணக்கில்லை
அன்றாடம் வழிபடு..
கவலைகள் காணாமல் போகும்...
மஞ்சள் பிள்ளையாரை பிடித்து
அரச இலையில் அமரவைத்து
அருகம்புல்லை அருகில் வைத்து
அடுத்த ஞாயிறுவரை
பத்தி காட்டி பக்தியாய் வழிபட
பங்காளி பகை நீங்கி
பங்கு பாதகமின்றி பத்திர பதிவு
நீ நினைத்தபடி நிறைவாய் கிடைக்கும்...

கற்பக விநாயகரே!
“அற்புத கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வக் களஞ்சியத்
திருக்கை சென்று பொற்பதம் பணிந்து
பாரீர் பொய்யில்லை கண்ட உண்மை”...

விநாயகர் பெயரை
தினம் உச்சரித்து
வெற்றிமேல் வெற்றிபெற்று
தினம் மகிழவும்...

**செல்: 96003 53748**



சென்ற இதழ் தொடர்ச்சி...

# விவாகரத்துக்கான கிரக அமைப்புகள் எவை?

## தனுசு லக்னம்

**த**னுசு லக்னாதிபதி குரு ஆவார். உங்களின் 7-ஆம் அதிபதி புதன். நீங்கள் உபய ராசி வகையைச் சேர்ந்தவர் என்பதால், 7-ஆம் அதிபதி பாதகாதிபதி ஆவார். உங்களின் 7-ஆம் அதிபதி **புதன்** நீசமானால் உங்களின் திருமண முறிவிற்கு உங்கள் தாயார் அல்லது உங்களின் தொழில் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணை செய்யும் தொழில் என ஏதோ ஒன்று காரணமாகிவிடும். **சந்திரன்** நீசமானால் விபத்து, திருட்டு, மனபிறழ்வு, உடல்நல கேடு இவை பிரிவின் காரணமாகும். **சூரியன்** நீசமானால் அநியமாக, அதர்மமாக சேர்க்கப்படும் இணை காரணமாகும். சிலருக்கு உங்களின் மூத்த சகோதரனின் கெடுபுக்தி பிரிவை உண்டாகும். **சுக்கிரன்** நீசமானால் உங்களின் கடன், நோய், நிலையில்லாத வேலை, தொழில் மற்றும் மூத்த சகோதரியால் மணமுறிவு ஏற்படும். **செவ்வாய்** நீசமானால் முறையற்ற காதல் துணையுடன்

ஊரைவிட்டு ஓடிவிடுவது, சினிமா ஆசையில் குடும்பத்தைவிட்டு ஓடிபோவது, எங்காவது அடிபட்டு நினைவிழப்பது என இம்மாதிரி விஷயங்கள் பிரிவைக் கொடுக்கும். **குரு** நீசமானால் உங்கள் குடும்பத்தாரும் நீங்களும் பேசும் அடாவடி, அயோக்கித்தனமான பேச்சுக்கள் உங்கள் வாழ்க்கைத் துணையை, 'ஆளை விடுடா சாமி' என ஓட செய்யும். மற்றும் வாழ்க்கைத் துணையின் தொழிலில் ஏற்படும் மிகப்பெரிய சரிவும், பண இழப்பும் மணமுறிவை கொடுக்கும். **சனி** நீசமானால் உடல்நிலை இயலாமை, விவாகரத்துக்கு வழிவகுக்கும். உங்கள் தனுசு லக்னத்துக்கு, புதன் மற்றும் செவ்வாய் இணைவு, சார பரிவர்த்தனை போன்றவை பெரும்பாலும் விவாகரத்தை கொண்டுவந்துவிடும். நரசிம்மரை வணங்குவது நல்லது.

**பரிகாரம்**

ஸ்ரீரங்கம், தாயார் சன்னிதி அருகேயுள்ள வில்வ மரத்தின் அடியிலுள்ள துளசி மாடத்தில் நெய் விளக்கேற்றி வைப்பது, தம்பதிகள் பிரியாமல் ஒன்றாக இருக்க உதவும். உங்கள் கல்யாண நாளில், இஷ்ட தெய்வத்திற்கு பாசி பருப்பு பாயசமும், வெள்ளை கொண்டைக் கடலை சுண்டலும் வினியோகம் நல்லது.

## மகர லக்னம்

**ம**கர லக்னாதிபதி சனி உங்களின் 7-ஆம் அதிபதி சந்திரன். இந்த இரு கிரக இணைப்புகளும் புனர்பூ யோகம் எனும் மறு திருமண யோகத்தை கொடுக்கும் அமைப்பாகும். உங்கள் ஏழாம் அதிபதி **சந்திரன்** நீசமானால், உங்கள் தாயார், மூத்த சகோதரன் அல்லது வயது மூத்த பெண்ணிடம் கொள்ளும் மறைமுகத் தொடர்பு என இவை திருமண முறிவிற்கு காரணம். **சூரியன்** நீசமானால் விபத்து அல்லது அரசாங்கம் தண்டனைகளால் முறிவு ஏற்படும். **புதன்** நீசமானால் வேலைக்கு செல்லாமல் இருப்பது, உடல்நிலை இயலாமை, தந்தை இவை பிரிவின் காரணமாகும். **சுக்கிரன்** நீசமானால் தொழில் செய்யும் இடத்தில் உண்டாகும் திருட்டுக் காதல், மாமியார், தொழில் நஷ்டம் இவை முறிவின் காரணமாகும். **செவ்வாய்** நீசமானால், அங்கு களஸ்திர பெருக்கும் எனும் அமைப்பு உண்டாகிவிடுகிறது. களஸ்திரம் என்பது ஒன்று இருக்கவேண்டும். அது பன்மையில் இருந்தால் நன்றாகவா இருக்கும். இந்த அமைப்புடையோர்தான், நிறைய குடும்பங்களை உருவாக்கி, அனேக ரேஷன் கார்டுகளில் பெயர் பதிவு பெறுகிறார்கள். ரேஷன் கார்டோ, மனைவியோ ஒரு இடத்தில்தான் குடும்பத் தலைவராக இருக்கவேண்டும். பல இடத்தில் இருப்பின், பலமுறை மண முறிவு ஏற்படும். மேலும் இவரது தாயாரும் இதற்கு ஒத்து ஊதுவார். **குரு** நீசமானால், உடல் இயலாமை, வெகு தூர பிரிவு, வீட்டில் நிலையாக இருக்க முடியாதது, இளைய சகோதரம் இவை மண முறிவிற்கு காரணமாகும். **சனி** நீசமானால், உங்கள் தாயார் பேச்சைக் கேட்டு பிரிவு உண்டாக்கி விடுவீர்கள். உங்கள் குடும்பத்தினரும், பண விஷயமும் இதற்கு பக்க பலமாகும்.

**பரிகாரம்**

மகர லக்னத்தார், நாகை மாவட்டம் திருவேள்விக்குடி சென்று பரிகாரம் செய்த பிறகு திருமணம் செய்யவேண்டும். திங்கட் கிழமைதோறும் சிவனை வணங்கவும். உங்கள் திருமணநாளில், தெரிந்தவர்களுக்கு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுங்கள்.

## கும்ப லக்னம்

**கு**ம்ப லக்னாதிபதி சனி. ஏழாம் அதிபதி சூரியன். இந்த இரு கிரகங்களுக்குமிடையே எப்போதும் சரிப்பட்டு வராது. இதனால் கும்ப லக்னத்தாரின் மணவாழ்வு நூறு சதவிகிதம் வெற்றிபெறும் என்று சொல்ல இயலாது. சனி, உத்திராட நட்சத்திரத்தில் நின்றாலோ, சூரியன் பூச நட்சத்திரத்தில் நின்றாலோ, நல்ல பலன் கொடுக்காது. 7-ஆம் அதிபதி **சூரியன்** நீசமானால், உங்கள் திருமண முறிவுக்கு, உங்கள் பெற்றோர் காரணமாகிவிடுவர். **புதன்** நீசமானால், உங்களின் மறைமுக காதல் மற்றும் வேண்டாத செயல்களின் பண இழப்பும் பிரிவின் காரணமாகும். **சுக்கிரன்** நீசமானால் பயணங்களில் ஏற்படும் விபத்து பிரிவிற்கு காரணமாகிவிடும். **செவ்வாய்** நீசமானால், உடல் இயலாமை, வேலை இழப்பு, இளைய சகோதரம், தொழில் நஷ்டம் இவை மண முறிவிற்கு

காரணமாகும். **குரு** நீசமானால் பண இழப்பும், இரண்டாவது துணையும் பிரிவை கொண்டுவரும். லக்னாதிபதி **சனி** நீசமானால் காணாமல் போய்விடுவதால் பிரிவு ஏற்படும். அல்லது அரசு தண்டனையால் உண்டாகும் விலகல் பிரிவு கொண்டுவரும். **சந்திரன்** நீசமானால், வேலை, தொழில் எதுவுமின்றி ஒரே இடத்தில் முடங்கிபோவது அல்லது பெரிய வியாதி ஏற்பட்டு படுத்த படுக்கை ஆவது இவை மண முறிவின் காரணமாகும்.

**பரிகாரம்**

கும்பகோணம் அருகில் திருச்சக்தி முற்றம் எனும் திருத்தலம் சென்று வணங்கலாம். திருவண்ணாமலை சென்று தம்பதிகளாக தரிசனம் செய்யவும். திருமணநாளில் வெண்பொங்கல் விநியோகம் செய்யவும். சனீஸ்வரருக்கு விளக்கேற்றுவதை வழக்கமாக்கி கொள்ளவேண்டும்.

## மீன லக்னம்

**மீ**ன லக்னாதிபதி குரு. உங்களின் 7-ஆம் அதிபதி புதன். மீன லக்னம் ஒரு உபய ராசி. அதன் ஏழாம் அதிபதி அதன் பாதகாதிபதியும் ஆவார். இதில் இன்னொரு விஷயம் உங்கள் லக்னத்தில் உங்கள் ஏழாம் அதிபதி நீசமாவார். இதனால் உங்கள் திருமண வாழ்வை, ஒரு கண்ணாடி பாத்திரத்தை கையாள்வது போல், வெகு பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும். உப்பு பெறாத விஷயத்துக்கெல்லாம், டைவர்ஸ் ஆகிவிடும்; கவனம் தேவை. 7-ஆம் அதிபதி **புதன்** நீசமானால், திருமண முறிவிற்கு உங்களின் தாயாரும், உங்களின் வெளங்காத தொழிலும் காரணமாகும். **சுக்கிரன்** நீசமானால் சிறு தூரப் பயணங்களில் ஏற்படும் விபத்து அல்லது உங்களின் இளைய சகோதரி திருமண பிரிவின் காரணமாகும். **செவ்வாய்** நீசமானால் பழைய காதல், பண விஷயம் மற்றும் உங்கள் தந்தை கூடவே சூதாட்டத்தில் பணம் இழப்பது இவையும் மணமுறிவின் காரணமாகும். **குரு** நீசமானால், உங்கள் திருமண பிரிவிற்கு நீங்களே காரணமாகிவிடுவீர்கள். உங்களின் அரசியல் தோல்வி, தொழில் நஷ்டம் மற்றும் மூத்த சகோதரர் இவை உங்களின் திருமணத்தை முறிக்கும் காரணமாகும். **சனி** நீசமானால் வெளிநாட்டிற்கு சென்று, பணத்தை தொலைப்பது அல்லது மனைவியை தொலைப்பது அல்லது இரண்டாவது திருமணம் இவை கல்யாணத்தை காணாமல் ஆக்கிவிடும். **சந்திரன்** நீசமானால் காதல் விஷயம் மற்றும் உங்கள் பெற்றோர் மண முறிவின் காரணமாவர். **சூரியன்** நீசமானால் நோய், அரசு தண்டனை, விபத்து இவை காரணமாகும். சங்கரன் கோவில் சென்று சங்கர நாராயணரை வணங்கவும். திருமண நாளில் பாசிபயறு பாயசமும், வெள்ளை கொண்டைக் கடலை சுண்டலும் செய்து விநியோகம் செய்யவும். அருகிலுள்ள சிவா விஷ்ணு கோவில் சென்று மஞ்சள் அல்லது பச்சை வஸ்திரம் சாற்றி, தீபமேற்றி வழிபடவும்.

மேற்கண்ட கிரகங்களில் ராகு- கேது பற்றி குறிப்பிடவில்லை. ராகு- கேது லக்னம், ராசியில் அல்லது 2, 8-ல் இருப்பின் அது நாக தோஷமாகும். இதேபோல் நாக தோஷமுள்ள வரணை சேர்க்கும்போது, தோஷம் சமமாகி, தோஷ சாம்பம் ஆகிவிடுகிறது. எனினும் திருமணமாகியவுடன் ராகு அல்லது கேது தசை ஆரம்பித்தால் சற்று கவனமாக இருப்பது அவசியம். பாம்புகள், தம்பதிகளுக்குள் கருத்து வேறுபாடு, சந்தேகத்தை உண்டாக்கி விடுவர். அதனால் தம்பதிகளுக்குள் பிரிவு உண்டாக வாய்ப்புண்டு.

**பரிகாரம்**

கூடியமட்டும் ஜாதகத்தில் எந்த தோஷமுள்ளது என கண்டுபிடித்து, அதற்குரிய பரிகாரம் செய்துவிட்டு திருமண ஏற்பாடுகளில் இறங்குங்கள். திருமண முறிவு இந்த காலத்தில் மிகவும் சகஜமாகவும், எளிதாகவும் ஆகிவிட்டது. ஆனால் அதற்கு பிறகு வரும் வாழ்க்கையை, கணவன்- மனைவி இருவரும் ரொம்ப யோசியுங்கள்.உங்கள் ஜாதகத்தில் எந்த கிரகம் நீசமாகி உள்ளதோ அவை சார்ந்த விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும். முக்கியமாக, நீச கிரகங்களின் தசாபுக்தி காலங்களில் கூடுதல் கவனமாக இருந்து, திருமண வாழ்வை காப்பாற்றி கொள்ளுங்கள். உங்கள் வாழ்வு உங்கள் கைகளில் உள்ளது.

●

# மனச் சிக்கல்கள் தீர்க்கும்

# மலர் மருந்து!

2



**மா**னுட வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்ற அநேக ஆசிர்வாதங்களில் மனம் மலரச் செய்யும் இந்த மலர் மருத்துவமும் ஒன்று.

ஜீவிதத்தின் அசாத்திய உயர் நிலையில் பயணிக்கும் மனிதன் மனம் சார்ந்து பயணிக்கும் ஒரு உயிரி ஆவான்.

இந்த மனம் சார் பயணத்தில் இன்ப-துன்பங்களை அனுபவிக்கும் தன்மையானது மனதை பொருத்தே அமைந்து விடுவது நிச்சயமாகின்றது.

அதனால்தான் மனம்போல் வாழ்வு என்று பெரியோர்கள் பறை சாற்றினார்கள்.

இதனைத்தான் மலர் மருத்துவத்தின் தந்தை பாச் அவர்கள் மானுட எதிர்மறை உணர்வு நிலை ஏழு வகைப்படும் என்று பகுத்தறிந்து இதன் வழியாகத்தான் மனநிலையில் சமன்பாடு உலுக்கப்பட்டு உடல் மற்றும் மனம் சார் நோய்களுக்கும் காரணமாவதாக எடுத்துரைக்கின்றார்.

இந்த ஏழு வகையான எதிர்மறை உணர்வுகள் என்னவென்று பார்க்கலாம்.



1. பயம்
2. சஞ்சலம்
3. நிகழ்காலத்தை மறந்து கனவுலகில் வாழ்தல்
4. தனிமை உணர்வு
5. மற்றவர் செல்வாக்குக்கு உட்படல்
6. மனச்சோர்வு நிராசை
7. மற்றவர் நலனில் அதிக அக்கறை

போன்ற எதிர்மறையான உணர்வுகளின் மூலம்தான் மனித இனம் அனுபவிக்கும் அத்தனை பிரச்சினைகளுக்கும் காரணமென்று டாக்டர் கூறுகின்றார்.

அதோடு இந்த ஏழு எண்ணங்களுக்கு கீழ் 38 வகையான மனநிலையை கண்டறிந்து அதற்கு 38 வகையான மலர் மருந்துகளையும், அதீத நெருக்கடிகளைச் சந்திக்கும் தருவாய்க்கு 39 ஆவது கூட்டு மருந்தாக ஒரு மருந்தையும் கண்டுபிடித்து மனிதர்களின் வாழ்வுக்கு மாபெரும் ஜீவன் ஒளிரும் ஜோதியை ஏற்றியுள்ளார்.

மனம் என்றதும் ஜோதிடவியலின் வழியே பயணிக்கும்

மேல்மருவத்தூர் எஸ். கலைவாணி



தையும், விடையும் காணும் பொழுது பல இடர்களிலிருந்து வெளிவருவதற்கும் அநேக தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான விடைகள் நம்மிடையே கிடைக்கும்.

கேள்விகளுக்கான பதிலை என் நிலையில் இருந்து என்னுடன் பயணித்து, நான் கூறும் முறையில் காணலாம்; வாருங்கள்.

ஒரு கிரகம் அண்டத்தில் தன்னுள் என்னென்ன கனிமங்களை புதைத்து சுழன்றுகொண்டு இருக்கின்றதோ, அதே கனிமங்களுடனும், தன்மையுடனும், நமுள் மற்றும் வெளியே அவயங்களிலும் சுழன்று நம் பரிமாணத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

நமக்கு நினைவுக்கு வருவது சந்திரனும், ஐந்தாம் பாவகமும்தான். இதனால்தான் சந்திரன் ராகு, சந்திரன், கேது, சந்திரன் சனி போன்ற இணைவுகள் அதீத உணர்ச்சி வசப்படக் கூடியவர்களாகவும், எடுத்த எடுப்பில் எடுத்தெறிந்து பேசுபவர்களாகவும், தன் உண்மையான உயர்ந்த மனநிலையை எடுத்துரைக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

அதேபோன்று ஐந்தாம் பாவகாதிபதியின் நிலையும் நாம் அறிந்து செயல்பட வேண்டியது கட்டாயமாக அமைகின்றது.

சரி; ஒரு சிறிய சிந்தனைக்குள் செல்வோம். ஒரு கிரகம் எங்கிருந்து திசை நடத்துகின்றது? எதன் வழியே திசை நடத்துகின்றது? எதனால் ஒருநாள் இருப்பது போன்று மனநிலையோ அல்லது உடல் நிலையோ நமக்கு இருப்பதில்லை. எதன்பொருட்டு நமக்கு நோய் வருகின்றது, கிரகத்திற்கும் நம் உடலுக்கும் உள்ள தொடர்பு என்ன? ஒரு தசை புக்தி நன்மையும் அடுத்த தசா புக்தி தீமையும் ஏன்? ஒருவருக்கு நின்று நிகழ்த்துகின்றது என்ற கேள்விகள் உங்களில் யார் யாருக்கெல்லாம் தோன்றியது என்று தெரியாது. ஆனால் இதற்கான விளக்கத்

எவ்வாறு என்றால் சூரியன் தன் வெப்பத்தில் ஆளுமை செய்வதுபோல் உடலிலுள்ள தட்பவெப்பம் மற்றும் வலது கண் தலை சார்ந்த இடங்களின்மூலம் தன்னை வெளிப்படுத்தி திசையின் பாதையில் இந்த அவையங்களில் ஜாதகத்திற்கு ஏற்ப பலமோ அல்லது பலவீனத்தையோ அணுகி மனதின்மூலம் முடிவெடுக்கும் தன்மையை அளித்து விடுகின்றது.

சந்திரன் உடலிலுள்ள ரத்த ஓட்டம் இடது கண் கருப்பை. புதன் மூளையின் முழு செயல்பாட்டின் நியூரான்களாக செயல்படுகின்றது.இதேபோன்று சனி நடுமுதுகில் பயணிக்கும் சி.எஸ்.எப் என்கின்ற திரவத்தின்மூலம் மனித உடலில் ஆளுமையை செலுத்துகின்றது. கேது மனித மூளையின் நினைவு கிடங்காக செயல்படுகின்றது

இப்படிதான் ஒவ்வொரு கிரகமும் மனிதனின் உடல்நிலையில் அமர்ந்து தனது செயல்பாட்டினை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றது. இப்பொழுது கூறுங்கள் கிரகங்கள் எங்கிருந்து திசைகளை நடத்துகின்றன என்ற கேள்விக்கு மனித உடலில் பூரணமாக அமர்ந்து மனதின் வழியே கிரகங்கள்

# இந்த வாரம்

## உங்களுக்கு கை கொடுப்போர் யார், கைவிடுவோர் யார்?

**15-6-2025 முதல் 21-6-2025 வரை**

இந்த ஏழு நாட்களில் உங்களுக்கு எந்த எண்காரர் கை கொடுப்பார், எந்த எண்காரர் கைவிடுவார் என்கிற குறிப்பு தரப்பட்டுள்ளது. இது பிறந்த தேதியின் அடிப்படையில் தரப்பட்டுள்ள குறிப்பு ஆகும். பிறந்த தேதி தெரியாதவர்கள் அவரவரின் பெயர் எண்களின் அடிப்படையில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

| உங்கள் எண் | கைகொடுப்போர் எண் | நடுநிலையாளர் எண் | கைவிடுவோர் எண் |
|---|---|---|---|
| 1. | 1, 2, 6, 7 | 3, 5, 9 | 4, 8 |
| 2. | 2, 3, 5, 9 | 1, 4, 8 | 6, 7 |
| 3. | 1, 3, 6, 7 | 4, 5, 8 | 2, 9 |
| 4. | 1, 5, 8, 9 | 2, 3, 6 | 4, 7 |
| 5. | 1, 2, 5, 8 | 3, 4, 9 | 6, 7 |
| 6. | 3, 4, 6, 9 | 1, 2, 5 | 7, 8 |
| 7. | 2, 6, 7, 9 | 3, 4, 8 | 1, 5 |
| 8. | 5, 6, 7, 9 | 2, 3, 8 | 1, 4 |
| 9. | 1, 3, 5, 6 | 2, 7, 9 | 4, 8 |

## எதனால் ஒருநாள் இருப்பது போன்று மனநிலையோ அல்லது உடல் நிலையோ நமக்கு இருப்பதில்லை. எதன்பொருட்டு நமக்கு நோய் வருகின்றது, கிரகத்திற்கும் நம் உடலுக்கும் உள்ள தொடர்பு என்ன?

திசைகளை நடத்துகின்றது என்பதே உண்மை.

அதை எடுத்து மனநிலையை சரி செய்யும்பொழுது பல வெளிநிலை சார்ந்த சூழலும் மாறும். அதோடு உள்நிலை சார்ந்த சூழலும் இணக்கமான தன்மையை அளிக்கும் என்பது இதிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒரு கருத்தாக அமைகின்றது.

மேற்கூறிய 39 வகையான மலர் மருந்தில் முதல் மருந்தான அக்ரிமோனி என்கின்ற மருந்து பேசாத அழுத்த சுபாவமுள்ள தன்மையையும், சண்டை, சச்சரவுகள் என்றால் ஒதுங்கி செல்லும் தன்மையையும், கேள்வி கேட்டால் பிடிக்காதவர்களாகவும், என் பிரச்சினை என்னோடு இருக்கட்டும் என்றும், கடந்தகால அவமானம் அல்லது அப்படி நடந்துவிட்டது என்பதை நினைத்து துன்பமடையும் சூழலையும், கவலையை மறக்க அடிக்கடி சிரிப்பு நகைச்சுவை செய்தல் எந்த சூழ்நிலையையும், மன அழுத்தத்தை வெளிகாட்டாத தன்மையையும், தீர்க்கக்கூடிய மாபெரும் வல்லமை நிறைந்தது மலர் மருந்தாக அமைந்துள்ளது.

ஜாதகத்தில் இரண்டு மற்றும் ஐந்தாம் பாவகங்கள் பலவீனமாக உள்ள நபர்களுக்கு இந்த மருந்து மாபெரும் துணையை வழங்கும்.

சில இடர்பாடுகளைத் தீர்க்கும் மருந்துகளின் கூட்டுகளை ஒவ்வொரு ராசி மற்றும் நட்சத்திரங்கள் சார்ந்து வழங்கும்பொழுது இந்த பிரச்சினைகளில் இருந்து வெளிவரும் தன்மையை வழங்கும் என்பது உறுதி.

இந்த மனநிலைக்கு எதிரான மருந்து ஹீதர் என்ற மருந்து.

கல்வி, கணவன்- மனைவி சார்ந்த பிரச்சினைகள், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் என்று மனித தேவைகளின் அனைத்தையும் பூர்த்திசெய்யும் அற்புதமான கற்பக விருட்சம் இந்த மலர் மருந்தாகும்.

தொடர்ந்து சந்திப்போம்!

செல்: 80563 79988

# அம்மன் கோவிலுக்கு உகந்த பூஜைமுறைகளை உபதேசித்த

# அகத்தியர்!

ஜீவநாடியில் பலன்கேட்க 70 வயதிற்கும் அதிகமான ஐந்து பெரியவர்கள் வந்திருந்தார்கள். அவர்களை அமரவைத்து, 'என்ன காரியமாக பலனறிய வந்துள்ளீர்கள்' என்றேன்.

ஐயா, "நாங்கள் வசிக்கும் ஊர் ஒரு சிறிய கிராமம். எங்கள் கிராம தெய்வமாக எங்கள் முன்னோர்கள் உருவாக்கி வழிபட்டுவந்த ஒரு அம்மன் கோவிலுள்ளது. அவர்கள் ஒரு சிறிய மண்குடிசையில் ஒரு உருண்டையான கல்லை வைத்து, அந்தக் கல்லையே அம்மனாக நினைத்து வணங்கிவந்தார்கள்.

ஐந்த வருடங்களுக்குமுன்பு, கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து நிறையப் பணம் செலவுசெய்து மண்டபம், மூலஸ்தானம், கோபுரம், கலசம் வைத்து கோவில்கட்டி முன்னோர்கள் வணங்கிய அந்தக் கல்லை எடுத்து, வெளியில் வைத்துவிட்டு அம்மனுக்கு புதிய சிலைசெய்து, கர்ப்பக் கிரகத்தில் வைத்து, வேதம் படித்த சிவாச்சாரியார்களைக்கொண்டு, கும்பாபிஷேகம், 48 நாட்கள் மண்டலாபிஷேகம் இவற்றை முறையாகச் செய்து முடித்தோம்.

முன்னோர்கள் காலத்தில் இருந்தே அந்த அம்மன் கோவில் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்தது. தங்கள் குறைகள் நீங்க எதை வேண்டுதல், பிரார்த்தனை செய்தாலும், அதை நிறைவேற்றி வைத்துவிடும். குறிப்பாக ஒருவர் வீட்டில் பணம், பொருள், ஆடு, மாடு என எது திருட்டுப் போனாலும், திருடியவரை தண்டித்து அவர்கள் மனம் திருந்தி, திருடியவர்களே தாங்கள் திருடியதை ஒப்புக்கொள்ள வைத்து, பொருள் இழந்தவர்களுக்கு அதைத் திரும்பக் கிடைக்க வைத்துவிடும். அவ்வளவு சக்திவாய்ந்ததாக அம்மன் இருந்தது.

ஐந்து வருடங்களுக்குமுன்பு புதிதாக கோவில் கட்டி முன்னோர்கள் வணங்கிய கல்லை எடுத்துவிட்டு அம்மன் உருவச் சிலையை வைத்து, கும்பாபிஷேகம் செய்தபின்பு



அம்மனின் சக்தி குறைந்துகொண்டே வருகின்றது. வேண்டுதல், பிரார்த்தனை எதுவும் பலிப்பதில்லை. திருட்டுப்போன பொருள் முன்புபோல் திரும்பக் கிடைப்பதில்லை. அம்மனின் சக்தி குறைந்துபோனதிற்கு காரணம் அறிந்துகொள்ளவும், முன்புபோல் இருந்த சக்தி அம்மனுக்கு உண்டாகவும் வழிகேட்டு அகத்தியரை நாடி வந்துள்ளோம்'' என்றார்கள்.

ஜீவநாடியில் அகத்தியர், ஒரு மனிதனின் முன்பிறவி பாவ- சாபங்களையும், அதனால் இப்பிறவியில் அவர்கள் வாழ்வில் அனுபவிக்கும் தொழில், கடன், நோய், திருமணம், புத்திரன், கணவன்- மனைவி, குடும்ப பிரச்சினை இதுபோன்றவற்றுக்கு பாவ- சாபங்களைக் கூறி, அவை நிவர்த்தியாகி சிரமம், கஷ்டம் இல்லாத நல்ல வாழ்க்கை அடைய வழி கூறியுள்ளாரே தவிர, கடவுள் சம்பந்தமான எதற்கும் இதுநாள்வரை பலன்

கூறியதில்லை. நானும் ஓலை படித்ததில்லை. அதனால் நீங்கள் கூறுவதற்கு நான் ஓலை படிக்கமுடியாது. வேறு எங்காவது சென்று கேட்டுப் பாருங்கள் என்றேன்.

ஜீவநாடியில் பார்க்க வருவதற்குமுன்பே, பலரிடம் சென்று இதற்கு பலன் கேட்டுப் பார்த்தோம். ஒவ்வொரு வரும், ஒவ்வொருவிதமாக காரணம் கூறினார்கள். சிலர் கடவுளைக் கட்டிவிட்டார்கள் என்றார்கள். இதற்கு அவர்கள் கூறிய பரிகார பூஜைகள், யாகம், ஹோமம், மாந்திரீகம் என அனைத்தையும் செய்தோம்; பலனில்லை. அதனால் தான் தங்களை நாடிவந்தோம். ஒரு ஊர்மக்களின் நன்மைக் காக நீங்கள் ஓலையைப் பிரித்துப் படியுங்கள். அகத்தியர் கூறினால் கேட்டுக்கொள்கின்றோம். கூறவில்லையென் றால் உங்களை வற்புறுத்த மாட்டோம் என்றார்கள்.

ஐந்து பேரும் வயதில் பெரியவர்கள், அவர்கள் கூறுவதை அலட்சியம் செய்யவும் முடியவில்லை. அகத்தி யரை வணங்கிவிட்டு, ஜீவநாடி ஓலையைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினேன். ஓலையில் அகத்தியர் எழுத்து வடிவில் தோன்றி பலன்கூறத் தொடங்கினார்.

ஓலையை அவர்கள்முன்பு படிக்காதே, நான் கூறுவதை நன்கு மனதில் பதிய வைத்துக்கொள், அதன்பின்பு ஓலையைக் கட்டி வைத்துவிட்டு, நான் கூறியதை அவர்களிடம் கூறு என்று கூறிவிட்டு சில குறைகளையும், மறுபடியும் அம்மனுக்கு சக்தி உண்டாக சில வழிமுறைகளையும் கூறிவிட்டு, ஓலையில் இருந்து மறைந்தார். அதன்பின்பு நான் ஓலையைக் கட்டிவைத்து விட்டு, அகத்தியர் கூறியதை அவர்களிடம் கூறத் தொடங்கினேன்.

உங்கள் ஊர் அம்மனுக்கு கோவில் கட்டியது சரிதான். ஆனால் சில தவறுகளை செய்துவிட்டீர்கள். முன்னோர்கள் தெய்வமாக வழிபட்டுவந்த கல்லை, தூக்கி வெளியில் எறிந்துவிட்டீர்கள். அந்தக் கல்லிலுள்ள சக்தியை நீங்கள் அறிந்துகொள்ளவில்லை. இப்போது வெளியில் கிடப்பதால், அந்தக் கல்லின்மீது பலர் சாதாரணக் கல் என்று நினைத்து, அதன்மீது அமர்ந்து கொள்கின்றார்கள். உங்கள் முன்னோர்களின் பக்தியும், நம்பிக்கையும், அதனால் உண்டான தெய்வ சக்தியும், அந்தக் கல்லில் இன்னமும் உள்ளது. மறுபடியும் அந்தக் கல்லை எடுத்து, கர்ப்பக் கிரகத்தில் உள்ளே நீங்கள் புதிதாக வைத்துள்ள அம்மன் சிலைக்கு முன்பாக பதித்துவிடுங்கள். இனி செய்யும் பூஜைகள், படைப்புகள் அனைத்தையும் அந்தக் கல்லிற்கு முக்கியத்துவம் தந்து செய்யுங்கள். உருவ சிலைக்கு நீங்கள் விருப்பம்போல் அலங்காரம் செய்துகொள்ளுங்கள்.

கோவிலில் அம்மனுக்கு வேதம் படித்த குருக்களைக் கொண்டு தினமும் இரண்டுவேளை பூஜை செய்து வருகின்றீர்கள். உங்கள் முன்னோர்கள் காலத்தில், உங்கள் முன்னோர்கள் வழிபட்ட இந்த அம்மனுக்கு உங்கள் சாதியைக் காரணம் கூறி வேதம் படித்த குருக்கள் வந்து பூஜை செய்ய மறுத்துவிட்டார்கள். அதனால் உங்கள் ஊரைச் சேர்ந்த உங்கள் இனத் தைச் சேர்ந்த ஒருவரையே அம்மனுக்கு பூஜை செய்ய முன்னோர்கள் பூசாரியாக நியமித்தார்கள். அந்த வம்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே இதுவரை பூஜை செய்துவந்தார்.

கோவில் கும்பாபிஷேகத்திற்குப் பிறகு, அந்தப் பூசாரியை நீக்கிவிட்டு, இப்போது சாதியைச் சொல்லி அம்மனை ஒதுக்கி வைத்த வேதம் படித்த குருக்களை பூஜை செய்ய வைத்துவிட்டீர்கள். இப்போது அவர்கள் அம்மன்மீது பக்தியுடன் பூஜை செய்யவில்லை. பணத்திற்காக கடமையைச் செய்கின்றார்கள். இனி மறுபடியும் அந்த பூசாரி குடும்பத்தினரையே சிலையை தொட்டு நீரால் கழுவி பூஜை செய்யட்டும். குருக்கள் பூஜை செய்யவேண்டாம்.

உங்கள் முன்னோர்கள் கல்லையே கடவுளாக நினைத்து தங்கள் மனதில் அம்மனைக் கண்டு வணங்கினார்கள். ஆனால் இப்போது நீங்கள் கல்லில் ஒரு உருவம் செய்து, அதற்கு கலர் கலராக அலங்காரம் செய்து அதன் அழகை கண்டு வணங்குகின்றீர்கள். ஆனால் மனதில் அம்மன் பக்தி இல்லை. முன்னோர்கள் உருவாக்கி செய்த வழிபாடு முறைகள் மாறும்போது, அந்தக் கோவில் தெய்வ சக்தி அனைத்தும் மாறும். மனிதர்கள் மனம், செயல் மாறலாம். ஆனால் முன்னோர் கள் நிர்ணயித்த முறை மாறக்கூடாது என்று அகத்தியர் கூறியதை அவர்களிடம் கூறி அனுப்பிவைத்தேன்.


சிவன், விஷ்ணு, சைவ, வைணவ தெய்வங்களின் கோவில்களில் ஆகம விதிகள் உள்ளதுபோல் காளி, மாரி, பிடாரி, பேச்சி போன்ற அனைத்து கிராம தெய்வங்களின் ஆலயங்களுக்கும் தனித்தனியே ஆகம விதிகள் உண்டு, அவற்றைவிடுத்து நாமே எதையாவது புதிதாக செய்தால் அந்த தெய்வங்களின் சக்தி குறைந்து விடும். இதுபோன்று ஒவ்வொரு குடும்பத்தினரின் குலதெய்வத்தையும் முன்னோர்கள் வகுத்துதந்த முறையில் வழிபட்டால்தான் குலதெய்வத்தின் அருள் அந்தக் குடும்பத்திற்கு முழுமையாக கிடைக்கும் என்பதை நானும் அறிந்துகொண்டேன்.

**செல்: 99441 13267**

| | | | |
|---|---|---|---|
| சனி | சுக்கிரன் | சூரியன் | குரு புதன் |
| ராகு | திருக்கணித கிரக நிலை | | |
| சந்திரன் | | | கேது செவ்வாய் |
| | | | |

**15-6-2025 முதல்**
**21-6-2025 வரை**





## மேஷம்

**(அஸ்வினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்)**

ஜென்ம ராசியில் சுக்கிரன், 3-ல் சூரியன் சஞ்சரிப்பதால் எதிலும் தைரியத்தோடு செயல்படுவீர்கள். குருபார்வை 7-ஆம் வீட்டுக்கு இருப்பதால் கணவன்- மனைவியிடையே ஒற்றுமை சிறப்பாக இருக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் கைகூடக்கூடிய வாய்ப்புகள் உண்டு. உங்கள் ராசிக்கு 11-ல் ராகு சஞ்சரிப்பதால் தொழில், வியாபாரத்தில் சாமர்த்தியமாக செயல்பட்டு கடந்தகால பிரச்சினைகளை சமாளித்து வளமான பலன்களைப் பெறுவீர்கள். வேலையாட்களால் சில இடையூறுகள் இருந்தாலும் உங்கள் தனித் திறமையால் எதையும் சமாளிக்கக்கூடிய பலம் உண்டாகும். வெளியூர் தொடர்புகள்மூலமாக ஒருசில ஆதாயத்தை அடையக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. பிறருக்கு தந்த வாக்குறுதிகளை எளிதில் காப்பாற்றுவீர்கள். உணவு விஷயத்தில் கட்டுப்பாடோடு இருந்தால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் நெருக்கடி இருந்தாலும் எடுத்தப் பணியை குறித்த நேரத்தில் செய்து முடிக்கக்கூடிய பலம் உங்களுக்கு இருக்கும். மாணவ- மாணவியர்கள் எதிலும் சிறப்பாக செயல்பட்டு பெற்றோர்- ஆசிரியர்களின் பாராட்டுதலை பெறக்கூடிய நேரமாகும். வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வது, மாற்றுத் திறனாளிகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது நன்மை தரும்.

**வெற்றி தரும் நாட்கள்: 15, 16, 17, 18.**



## ரிஷபம்

**(கிருத்திகை 2, 3, 4-ஆம் பாதங்கள்**
**ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்)**


உங்கள் ராசிக்கு 2-ல் குரு, புதன், 11-ல் சனி சஞ்சரிப்பதால் பணவரவுகள் மிகவும் சாதகமாக இருந்து அனைத்துவிதமான தேவைகளும் பூர்த்தியாகக்கூடிய நாட்களாக வருகின்ற நாட்கள் இருக்கும். குடும்பத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் எல்லாம் தற்போது விலகி ஒற்றுமை அதிகரிக்கும். நண்பர்கள்மூலமாக ஒரு சில வளமான பலன்களைப் பெறக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. தொழில்ரீதியாக சந்தை சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருப்பதால் நல்ல லாபத்தை ஈட்டக்கூடிய யோகமானது உங்களுக்கு இருக்கிறது. புதிய யுக்திகளை பயன்படுத்தி தொழிலை அபிவிருத்தி செய்யக்கூடிய

# இந்த வார ராசிபலன்



வாய்ப்புகள் ஏற்படும். உடல்ரீதியாக இருந்த பாதிப்புகள் எல்லாம் தற்போது விலகி எதிலும் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்களுக்கு இருக்கக்கூடிய கடன்களை குறைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைப்பது மட்டுமில்லாமல் உங்கள்மீது இருந்த பழிச்சொற்கள் எல்லாம் தற்போது விலகுவதால் பணியில் நிம்மதியுடன் செயல்பட முடியும். மாணவ- மாணவியர்கள் முன்பைவிட தற்போது உற்சாகத்தோடு செயல்பட்டு நல்ல மதிப்பெண்களை எடுக்கக்கூடிய நேரமாகும். வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற முருக வழிபாடு மேற்கொள்வது, மகாலட்சுமி வழிபாடு மேற்கொள்வதன்மூலம் வளமான பலன்களைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

**வெற்றி தரும் நாட்கள்: 16, 17, 18, 19.**



## மிதுனம்

**(மிருகசீரிடம் 3, 4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ஆம் பாதங்கள்)**

ஜென்ம ராசியில் புதன், 3-ல் செவ்வாய், கேது, 11-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் எதையும் எதிர்கொள்ளக்கூடிய பலம் உண்டாகும். பணம் கொடுக்கல்- வாங்கல் விஷயத்தில் ஏற்ற- இறக்கமான நிலை இருக்கும் என்பதால் ஆடம்பரச் செலவுகளை குறைத்துக்கொண்டு எதிலும் சிக்கனத்தோடு இருக்கவேண்டும். அதிலும் குறிப்பாக உங்களது முன்கோபத்தை சற்று குறைத்துக்கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் எடுத்த காரியத்தை குறித்த நேரத்தில் செய்துமுடித்து நல்ல லாபத்தை அடையக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு இருக்கும். அரசு அதிகாரியிடம் பேசுகின்ற பொழுது பேச்சில் சற்று பொறுமையோடு இருப்பது நல்லது. ஒருசிலருக்கு பயணங்கள்மூலமாக அனுகூலமான பலன்கள் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உங்கள் திறமைகளை வெளிக்காட்ட நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும். உடன் இருப்பவர்களிடம் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம் என்பதால் பிறர் விஷயத்தில் தலையிடாமல் உங்கள் பணியில் மட்டும் கவனத்தோடு இருப்பது நல்லது. மாணவ-


முனைவர் **முருகுபாலமுருகன்**
எண்: 19/33, வடபழனி ஆண்டவர் கோவில் தெரு, வடபழனி,
சென்னை 600 026. தமிழ்நாடு, இந்தியா. தொலைபேசி: 044 24881038, 2483 9532.
அலைபேசி: 0091 72001 63001, 93837 63001.




மாணவியர்கள் போட்டித்தேர்வுகளில் பங்குபெற்று பரிசுகளை வெல்லக்கூடிய காலமாகும். ஒருசில விஷயங்களில் சிந்தித்துச் செயல்படுவதன்மூலமாக வளமான பலன்களை அடையமுடியும். வரும் நாட்களில் ஏற்றமிகுந்த பலன்களைப் பெறுவதற்கு காலபைரவரை வழிபாடு செய்வது, சிவன் ஸ்தலங்களுக்கு சென்றுவருவது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள்: 19, 20, 21.**



## கடகம்

**(புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)**

உங்கள் ராசிக்கு 9-ல் சனி, 10-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்கும். பெண்கள்மூலமாக அனுகூலமான பலன்களை பெறக்கூடிய அதிர்ஷ்டமானது உங்களுக்கு இருக்கிறது. உங்கள் ராசிக்கு 12-ஆம் வீட்டில் சூரியன், குரு, புதன் சஞ்சரிப்பதால் பண விஷயத்தில் சற்று சிக்கனத்தோடு இருப்பது, மற்றவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. பொதுவாக நீங்கள் பேச்சில் சற்று பொறுமையோடு இருந்தால்தான் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எளிதில் சமாளிக்கக்கூடிய ஒருபலம் உண்டாகும். தொழில், வியாபாரத் தில் தற்போது கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டால் விரைவில் ஒரு நல்ல நிலையினை அடையக்கூடிய யோகமானது உங்களுக்கு உண்டு. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் மேலதிகாரிகளிடம் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடிய நேரமென்பதால் பேச்சில் சற்று பொறுமையோடு இருப்பது உத்தமம். மாணவ- மாணவியர்கள் நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் உடனிருப்பவர்கள் உங்களுக்கு தேவையற்ற நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடிய நேரமென்பதால் எதிலும் சற்று கவனத்தோடு இருப்பது நல்லது. வண்டி, வாகனங்களில் செல்கின்றபொழுது நிதானம் தேவை. வரும் நாட்களில் வளமான பலன்களைப் பெறுவதற்கு தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வதுமூலம் நல்லது நடக்கும்.

**வெற்றி தரும் நாட்கள்: 15, 21.**



## சிம்மம்

**(மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம்)**

உங்கள் ராசியாதிபதி சூரியன், குரு, புதன் சேர்க்கைபெற்று லாப ஸ்தானமான 11-ல் சஞ்சரிப்பதும், 9-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும் அற்புதமான அமைப்பு என்பதால் நீங்கள் நினைத்த தெல்லாம் நடக்கும். எடுத்த காரியத்தை குறித்த நேரத்தில் செய்து முடிக்கக் கூடிய பலம் உண்டாகும். பணவரவுகள் தாராளமாக இருப்பதால் உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாவது மட்டுமில்லாமல் நவீன கரமான பொருட்களை வாங்கக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. தொழில், வியாபாரத்தில் புதிய யுக்திகளை பயன்படுத்தி அதிகப் படியான லாபத்தை ஈட்டக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு இருக்கிறது. கடந்தகாலங்களில் உங்களுக்கு இருந்துவந்த சட்ட சிக்கல்கள் எல்லாம் தற்போது இருந்த இடம் தெரியாமல் மறையும். வேலைக்கு செல்பவர்களுக்கு பணியில் சுறுசுறுப்பாக செயல்படுவது மட்டுமில்லாமல் நீங்கள் விரும்பிய இடமாற்றத்தை பெறக்கூடிய நேரமாகும். புதிய வாய்ப்பு எதிர்பார்த்தவர்களுக்கு பெரிய நிறுவனத்திலிருந்து அழைப்புகள் வரும். ஜென்ம ராசியில் செவ்வாய், 8-ல் சனி சஞ்சரிப்பதால் கோபத்தை குறைத் துக்கொள்வது, உணவு விஷயத்தில் சற்று கட்டுப்பாடோடு இருப்பது நல்லது. மாணவ- மாணவியர்கள் படிப்பில் சிறப்பாக செயல்பட்டு நல்லபெயர் எடுக்க முடியும். முருக வழிபாடு மேற்கொள்வது, மாற்றுத் திறனாளிகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வதுமூலம் வளமான பலன்களைப் பெறமுடியும்.

**கிரக பாத சாரம்:**

சூரியன்: மிருகசீரிடம்- 2.
செவ்வாய்: மகம்- 2.
புதன்: திருவாதிரை- 4.
குரு: திருவாதிரை- 1.
சுக்கிரன்: பரணி- 1.
சனி: உத்திரட்டாதி- 2.
ராகு: பூரட்டாதி- 3.
கேது: உத்திரம்- 1.


**கிரக மாற்றம்:**

15-6-2025 மிதுன சூரியன் காலை 6.44 மணிக்கு

**சந்திரன் மாறுதல்**

ஆரம்பம்: மகரம்
16-6-2025 பகல் 1.10 மணிக்கு கும்பம்
18-6-2025 மாலை 6.35 மணிக்கு மீனம்
20-6-2025 இரவு 9.45 மணிக்கு மேஷம்

**வெற்றி தரும் நாட்கள்: 15, 16, 17.**



## கன்னி

**(உத்திரம் 2, 3, 4-ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்)**

உங்கள் ராசிக்கு ருண, ரோக, ஸ்தானமான 6-ல் ராகு, 10-ல் சூரியன், புதன் சஞ்சரிப்பதால் எதிர்நீச்சல் போட்டாவது அடைய வேண்டிய இலக்கை அடையக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். கடந்த சில நாட்களாக இருந்துவந்த பிரச்சினைகள் தற்போது குறையும். நண்பர்கள்மூலமாக ஒரு வளமான பலன்களைப் பெறுவீர்கள். ஒருபெரிய மனிதர்களுடைய நட்பு கிடைப்பதால் ஏற்றமிகுந்த பலன்களை அடையக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. தொழில், வியாபாரத்தில் சற்று பொறுமையோடு செயல் பட்டால் அனுகூலமான பலன்களை அடையக்கூடிய அதிர்ஷ்டமானது உங்களுக்கு உண்டு. சில விஷயங்களில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வதன்மூலமாக அனுகூலமான பலன்களை அடையமுடியும். உத்தியோகத் தில் இருப்பவர்கள் தற்போது கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டால் விரைவில் ஒரு நல்ல நிலையினை அடையக்கூடிய அதிர்ஷ்ட மானது உங்களுக்கு உண்டு. உடன்பிறந்தவரிடம் பேசுகின்றபொழுது சற்று பொறுமையோடு இருப்பது நல்லது. மாணவ- மாணவியர்கள் நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் உடனிருப்பவர்கள் உங்களுக்கு தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய காலம் என்பதால் எதிலும் கவனத்தோடு இருக்கவேண்டும். மகாலட்சுமி வழிபாடு மேற்கொள்வது, ஆஞ்சனேயர் வழிபாடு மேற்கொள்வதன்மூலமாக அனுகூலமான பலன்களை அடையக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு.

**வெற்றி தரும் நாட்கள்: 16, 17, 18, 19, 20.**

## துலாம்



**(சித்திரை 3, 4-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ஆம் பாதங்கள்)**

உங்கள் ராசிக்கு 6-ல் சனி, 9-ல் குரு, புதன், 11-ல் செவ்வாய், கேது சஞ்சரிப்பதாலும், கடந்த ஒரு மாதகாலமாக 8-ல் சஞ்சரித்த சூரியன் இனி 9-ல் சஞ்சரிக்க இருப்பதாலும் உங்கள் வாழ்வில் மறக்க முடியாத இனிய நிகழ்வுகள் நடக்கும். உடல் ஆரோக்கிய ரீதியாக இருந்த பாதிப்புகள் எல்லாம் இனி படிப்படியாக குறையும். குடும்பத்தில் நிலவிய பிரச்சினைகள் எல்லாம் விலகி வளமான பலன்களை அடையக்கூடிய அதிர்ஷ்டமானது உங்களுக்கு உண்டு. தொழில், வியாபாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சியை அடையக்கூடிய யோகமும், தொழிலை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்புகளும் வரும் நாட்களில் ஏற்படும். அரசாங்கவழியில் நீங்கள் எதிர்பார்த்த உத்தரவுகளை பெறக்கூடிய நேரமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் சுறுசுறுப்பாக செயல்படுவது மட்டுமில்லாமல் கடந்தகாலங்களில் நீங்கள்பட்ட கஷ்டத்துக்கு எல்லாம் தற்போது ஒரு விடிவு காலம் பிறந்து பொருளாதாரரீதியாக மிகப்பெரிய ஒரு அனுகூலத்தை பெறுவீர்கள். மாணவ- மாணவியர்கள் எதிலும் சிறப்பாக செயல்பட்டு படிப்பில் சிறந்து விளங்கக்கூடிய அமைப்பும், திறனை வெளிப்படுத்தக்கூடிய போட்டிகளில் பங்குபெற்று பரிசுகளை வெல்லக்கூடிய வாய்ப்புகளும் உண்டாகும். வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற துர்க்கையம்மனை தரிசிப்பது, அஷ்டலட்சுமி வழிபாடு மேற்கொள்வது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள்: 19, 20, 21.**




## விருச்சிகம்

**(விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

உங்கள் ராசிக்கு 4-ல் ராகு, 8-ல் சூரியன், குரு, புதன் சஞ்சரிப்பதால் எதிலும் சற்று பொறுமையோடு இருக்கவேண்டும். சக்திக்கு மீறியச் செலவுகள் ஏற்படக்கூடிய ஒரு நேரமென்பதால் பணவிஷயத்தில் சற்று சிக்கனத்தோடு இருக்கவேண்டும். நீங்கள் பெரிதும் நம்பியவர்களே உங்களுக்கு தேவையற்ற நெருக்கடிகளை ஏற்படுத்துவார்கள். தொழில், வியாபாரத்தில் நீங்கள் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் ஒருசிலர் செய்யக்கூடிய செயல்கள் காரணமாக உங்களுக்கு கிடைக்கவேண்டிய நல்ல வாய்ப்புகள்கூட தடைப்படக்கூடிய நேரமாகும். வேலையாட்களை சற்று அனுசரித்துச் செல்வது மிகவும் நல்லது. வேலைக்குச் செல்பவர்கள் வீண் பேச்சை குறைத்துவிட்டு எதிலும்

நிதானத்தோடு செயல்படவேண்டும். ஒருசிலருக்கு அதிகாரியிடம் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம் என்பதால் பேச்சில் பொறுமையோடு இருக்கவேண்டும். குடும்பத்தில் கணவன்- மனைவியிடையே ஒன்றுமே இல்லாத விஷயத்திற்குக்கூட தேவையற்ற மன ஸ்தாபங்கள் ஏற்படக்கூடிய நாட்களாக வருகின்ற நாட்கள் இருக்கும். மாணவ- மாணவியர்கள் நீங்கள் சிறப்பாக செயல்படவேண்டும் என்று நினைத்தாலும் ஞாபக மறதி ஏற்படக்கூடிய நேரமென்பதால் எதிலும் நிதானத்தோடு இருப்பது நல்லது. வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வது, லட்சுமி நரசிம்மருக்கு அர்ச்சனை செய்வதன்மூலம் அனுகூலங்கள் ஏற்படும்.

**வெற்றி தரும் நாட்கள்: 15, 21.**



## தனுசு

**(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்)**

உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5-ல் சுக்கிரன், 7-ல் குரு, புதன் சஞ்சரிப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். பணவரவுகள் தாராளமாக இருந்து சகல சௌபாக்கியங்களையும் அடையக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. உங்கள் ராசிக்கு 3-ல் ராகு சஞ்சரிப்பதால் எந்த ஒரு காரியத்திலும் சாமர்த்தியமாக செயல்படக்கூடிய பலம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சந்தை சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருப்பதால் நல்ல லாபத்தை ஈட்டக் கூடிய வாய்ப்புகள் உண்டு. கூட்டாளிகள்மூலமாக அனுகூலமான பலன்களை அடையக்கூடிய அதிர்ஷ்ட மானது உங்களுக்கு இருக்கிறது. ஒருசிலருக்கு தொழில் வளர்ச்சிக்காக நவீன கருவிகளை வாங்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருப்பது மட்டுமில்லாமல் மனைவி, பிள்ளைகள் விரும்பிய பொருட்களை வாங்கி தரக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் சிறப்பாக செயல்பட்டு அதிகாரியிடம் நல்ல பெயர் எடுக்கமுடியும். ஒருசிலருக்கு விரும்பிய பதவி உயர்வுகள் கிடைத்து மனமகிழ்ச்சி உண்டாகும். மாணவ- மாணவியர்களுக்கு கடந்த காலங்களிலி ருந்து வந்த உடல் சோர்வு எல்லாம் தற்போது விலகி படிப்பில் சிறப்பாக செயல்படக்கூடிய நேரமாகும். வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற ஆஞ்சனேயர் வழிபாடு மேற்கொள்வது, காலபைரவரை தரிசிப்பதன் மூலம் அனுகூலங்கள் ஏற்படும்.

**வெற்றி தரும் நாட்கள்: 16, 17.**




## மகரம்

**(உத்திராடம் 2, 3, 4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ஆம் பாதங்கள்)**

உங்கள் ராசியாதிபதி சனி 3-ல் சஞ்சரிப்பதாலும், 4-ல் சுக்கிரன், 6-ல் சூரியன் சஞ்சரிப்பதாலும் எல்லாவகையிலும் அனுகூலமான பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் செயல்களுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். இருக்கக்கூடிய இடத்தில் உங்களுடைய பெயர், புகழ் அதிகரிக்க கூடிய நேரமாகும். நீங்கள் எதிர்பார்த்த பண உதவிகள் தக்க நேரத்தில் கிடைத்து உங்களது தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் உங்கள் பொருட்களுக்கு நல்லவிலை கிடைப்பதால் போட்ட முதலை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. திறமைவாய்ந்த வேலையாட்கள் உங்கள் தொழிலில் இணைவதால் தொழிலை அபிவிருத்தி செய்யமுடியும். தொழில் முன்னேற்றத் திற்காக நீங்கள் எதிர்பார்த்த பொருளாதார உதவிகள் கிடைக்கும். உத்தியோகரீதியாக பார்க்கின்றபொழுது நல்ல ஒரு வளர்ச்சியினை பெறுவீர்கள். ஒருசிலருக்கு பயணங்கள்மூலமாக அனுகூலமான பலன்களை அடையக்கூடிய வாய்ப்புகள் வரும் நாட்களில் உண்டு. மாணவ- மாணவியர்கள் பொழுதுபோக்கு விஷயங்களில் நேரத்தை செலவிடுவதைவிட படிப்பில் கவனமுடன் செயல்பட்டால் ஒரு நல்ல நிலையை அடையமுடியும். உங்கள் ராசிக்கு 2-ல் ராகு, 8-ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் பேச்சில் பொறுமை யோடு இருப்பது, ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக்கொள்வது நல்லது. அம்மன் வழிபாடு, துர்க்கை வழிபாடு மேற்கொள்வதும், தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வதும் நன்மை தரும்.

**வெற்றி தரும் நாட்கள்: 15, 19, 20.**



## கும்பம்

**(அவிட்டம் 3, 4-ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ஆம் பாதங்கள்)**

உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5-ல் சூரியன், குரு, புதன் சஞ்சரிப்பதால் பணவரவுகள்

சாதகமாக இருந்து ஏற்றமிகுந்த பலன்களைப் பெறுவீர்கள். கடந்த காலங்களில் உங்களுக்கு இருந்து வந்த அலைச்சல், டென்ஷன் எல்லாம் தற்போது குறையக்கூடிய வாய்ப்புகள் உண்டு. உங்கள் ராசிக்கு 2-ல் சனி, 7-ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் கணவன்-மனைவியிடையே ஒருவருக்கொருவர் கௌரவம் பார்க்காமல் விட்டுக்கொடுத்து செல்வதன்மூலமாக வளமான பலன்களைப் பெறக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஒருசிலருக்கு உடன்பிறந்தவர்களிடம் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம் என்பதால் சூழலுக்கு ஏற்றவாறு பொறுமையோடு செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஒரு சில நெருக்கடிகள் இருந்தாலும் போட்ட முதலை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. ஒருசில விஷயங்களில் வேலையாட்களை நம்பாமல் நீங்கள் நேரடியாக செயல்பட்டால் அதிகப்படியான அனுகூலங்களை அடையமுடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியரிடம் வீண்பேச்சை குறைத்துவிட்டு உங்கள் பணியில் மட்டும் கவனம் செலுத்தினால் நல்லபெயர் எடுக்கலாம். மாணவ- மாணவியர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது உத்தமம். துர்க்கையம்மனுக்கு ராகு காலத்தில் அர்ச்சனை செய்வது, காலபைரவரை வழிபாடு செய்வது நன்மை தரும்.

**வெற்றி தரும் நாட்கள்: 17, 18, 21.**

## மீனம்

### (பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

உங்கள் ராசியில் சனி, 4-ல் குரு, சூரியன் சஞ்சரிப்பதால் தேவையில்லாத நெருக்கடிகள் ஏற்படும். அலைச்சல் காரணமாக இருப்பதை அனுபவிக்க இடையூறுகள் உண்டாகும். ஆடம்பர செலவுகளை சற்று குறைத்துக்கொள்வது நல்லது. எது எப்படியிருந்தாலும் உங்கள் ராசிக்கு 2-ல் சுக்கிரன், 4-ல் புதன், 6-ல் செவ்வாய், கேது சஞ்சரிப்பதால் எதிர்நீச்சல் போட்டாவது அடையவேண்டியதை அடையக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் தற்போது கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டால் விரைவில் ஒருநல்ல நிலையினை அடைய முடியும். ஒருசிலருக்கு சட்ட சிக்கல்கள் ஏற்படக்கூடிய ஒரு நேரமென்பதால் தொழில் தொடர்பான கணக்குகளை சரியாக பராமரிப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலைப்பளு ஏற்படுவது மட்டுமில்லாமல் நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் உடனிருப்பவர்கள் உங்கள்மீது வீண்பழிச் சொற்களை சொல்வார்கள். எந்த ஒரு விஷயத்திலும் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. மாணவ- மாணவியர்கள் நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் சக நண்பர்கள் உங்களை வேற்றுபாதைக்கு அழைத்துச் செல்லலாமென்பதால் எதிலும் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற சனிபகவானுக்கு எள் தீபமேற்றுவது, தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள்: 15, 16, 19, 20.**



## இவ்வார சுப முகூர்த்த நாட்கள்

**16-6-2025 ஆனி, 2-ஆம் தேதி, திங்கட்கிழமை,** *பஞ்சமி திதி, அவிட்டம் நட்சத்திரம், சித்தயோகம், காலை 9.00 மணிமுதல் 10.00 மணிக்குள் கடக லக்னம், தேய்பிறை.*

# திருமணத் தடை ஏற்படுத்தும் ஜாதக அமைப்புகள்!



ஒருவரின் திருமணத்தை கணவன்- மனைவி அமைப்பைக் குறிப்பிடுவது, களத்திர ஸ்தானமென்று கூறப்படும் லக்னத்திற்கு 7-ஆவது ராசியாகும். பாரம்பரிய வேத, கணித ஜோதிட முறையில் 7-ஆவது ராசியில் செவ்வாய், ராகு- கேது கிரகங்கள் இருந்தால் திருமணத்தடையை உண்டுபண்ணும்.

ஒருவரின் திருமணத்தடைக்கு ஜாதகம், கிரகங்கள் மட்டும் காரணம் இல்லை. தங்களுக்கு எதுபோன்று பெண், மாப்பிள்ளை அமைய வேண்டுமென்று ஆணும், பெண்ணும் அவரவர் மனதில் திட்டமிட்டு கற்பனை செய்துகொண்டு வரன் தேடுவது, குடும்பத்தில் பெற்றவர்கள், பெரியவர்கள் தங்கள் விருப்பம் ஆசைப்படி தங்கள் குழந்தைகளுக்கு மாப்பிள்ளை, பெண் தேடுவது, தங்கள் விருப்பம்போல் அமையும்வரை திருமணம் செய்துவைக்காமல் தங்களுக்குத் தாங்களே திருமணத்தடையை உண்டாக்கிக் கொள்கின்றார்கள்.

சப்தரிஷி நாடியில், திருமணத்தடைக்கு லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்கு முக்கியத்துவம் தருவது இல்லை. 12 ராசிகளில் எந்த ராசியாவது 7-ஆவது ராசியாக இருக்கலாம். அந்த 7-ஆவது ராசி கிரகத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து அந்த கிரகம், அமர்ந்த இடம் அதனுடன் சேரும் கிரகம், அதைப் பார்க்கும் கிரகம் இவற்றைக் கொண்டுதான் ஒருவருக்கு திருமணம் நடக்குமா? நடக்காதா? தடை, தாமதமாகி திருமணம் நடக்குமா? என்று பலன் அறியவேண்டும். ஏழாம் பாவத்தை, 7-ஆவது ராசியைக்கொண்டு சரியான பலனறிய முடியாது என்பது ரிஷிகள் வாக்கு ஆகும்.

ஆண்- பெண் இருவர் ஜாதகத்திலும், லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குடைய கிரகத்துடன் ராகு- கேது சேர்ந்திருந்தால் திருமணம் தடை, தாமதமாகும். ஜென்ம லக்னாதிபதி கிரகத்துடன் ராகு-கேது கிரகங்கள் சேர்ந்தோ அல்லது லக்னாதிபதி கிரகம் இருக்கும் ராசிக்கு 1, 5, 9, 7, 2-ஆவது ராசிகளில் இருந்தால் திருமணம் தாமதமாகும்.

ஆண்- பெண் இருவர் ஜாதகத்திலும் லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருக்கும் ராசிக்கு 6, 8-ஆவது ராசிகளில் லக்னாதிபதி கிரகம் இருந்தாலும் அல்லது லக்னாதிபதி கிரகம் இருக்கும் ராசிக்கு 6, 8-ஆவது ராசிகளில் 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருந்தாலும் திருமணம் தடையாகும். இது ‘சஷ்டாங்க தோஷம்’ ஆகும்.

(பாரம்பரிய ஜோதிடத்தில், ஆண் ராசி, பெண் ராசி ஒன்றுக் கொன்று 6-ஆவது, 8-ஆவது ராசிகளாக இருந்தால் இது சஷ்டாங்க தோஷம், பொருத்தமில்லை என்று கூறுவார்கள். ஆனால் சப்தரிஷி நாடியில், ஒருவர் ஜாதகத்திலேயே இந்த தோஷத்தை அறிந்துகொள்ள கூறியுள்ளார்கள். சஷ்டாங்க தோஷமுள்ள ஜாதகர்களுக்கு திருமணம் தடை, தாமதமாகும். திருமணத்திற்குப் பின்பு கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடு உண்டாகும்.)

ஜென்ம லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருக்கும் ராசிக்கு 4-ஆவது,

10-ஆவது ராசிகளில் லக்னாதிபதி கிரகம் இருந்தால் திருமணம் தடை, தாமதமாகும், இதேபோன்று லக்னாதிபதி கிரகம் இருக்கும் ராசிக்கு 4-ஆவது, 10-ஆவது ராசிகளில் 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருந்தாலும் திருமணம் தடை, தாமதமாகும்.

ஜென்ம லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குரிய கிரகத்துடன் 'சனி' சேர்ந்து இருந்தாலும் அல்லது 1, 5, 9, 2, 7-ஆவது ராசிகளில் இருந்தால் திருமணம் தடை, தாமதமாகும்.

லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குடைய கிரகம், லக்னத்திற்குரிய கிரகத்திற்கு 3, 6, 9, 12-ஆவது ராசிகளில் நின்றால் திருமணம் தடையாகும்.

ஜென்ம லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குரிய கிரகம் லக்னாதிபதிக்கு 2, 5, 8, 11-ஆவது ராசிகளில் இருந்தால் பல தடை, சிரமங்களுக்குப் பிறகு திருமணம் நடைபெறும்.

ஜென்ம லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குடைய கிரகம் இருக்கும். ராசிக்கு 1, 5, 9, 2-ஆவது ராசிகளில் கேது இருந்தால், திருமணம் நடப்பதில் தடை உண்டாகும். திருமணத்திற்குப்பிறகு கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். இதுபோன்று கேது கிரகம் இருந்தாலும் லக்னாதிபதி கிரகத்திற்கோ அல்லது 7-ஆவது ராசி கிரகம் இருக்கும் ராசிக்கு 1, 5, 9, 7-ஆவது ராசிகளில் 'குரு' கிரகம் இருந்தால், தடை நீங்கி திருமணம் நடைபெறும்.

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் அவளின் ஜாதக லக்னாதிபதி நின்ற ராசிக்கு 4, 6, 8, 10-ஆவது ராசிகளில், 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருந்தால், அவளுக்கு திருமணம் தடை, தாமதமாகும்.

பெண் ஜாதகத்தில் லக்னத்திற்கு 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருக்கும் ராசிக்கு 1, 5, 9, 2-ஆவது ராசிகளில் கேது இருந்தால் அவளுக்கு திருமணம் தடை, தாமதமாகும்.

ஆண்- பெண் இருவர் ஜாதகத்திலும் ராகு- கேது இருக்கும் ராசிகளுக்கு ஒருபுறம் லக்னாதிபதி கிரகமும், அதற்கு எதிர்புறம் 7-ஆவது ராசிக்குரிய கிரகம் இருந்தால் திருமணம் தடை, தாமதமாகும். திருமனம் நடந்து முடிந்தாலும் கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடு உண்டாகும்.

நாடி விதிப்படி ஒரு ஆணின் ஜாதகத்தில் 'குரு' கிரகம் இருக்கும் ராசிக்கு 4, 6, 8, 10-ஆவது ராசிகளில் மனைவியைக் குறிக்கும். 'சுக்கிரன்' இருந்தால் அவனுக்கு திருமணம் தடையாகும்.

நாடி விதிப்படி ஒரு பெண்ணின் ஜாதகத்தில், ஜாதகியைக் குறிக்கும் சுக்கிரன் இருக்கும் ராசிக்கு 1, 5, 9, 2-ஆவது ராசிகளில் கேது இருந்தாலும் சுக்கிரன் இருக்கும் ராசிக்கு 4, 6, 8, 10-ஆவது ராசிகளில் கணவனைக் குறிப்பிடும் செவ்வாய் கிரகம் இருந்தால், அவளுக்கு திருமனம் தடை, தாமதாகும்.

ஒரு ஆணின் ஜாதகத்தில், அவன் மனைவியைக் குறிப்பிடும் சுக்கிரன் இருக்கும் ராசிக்கு 1, 5, 9, 2-ஆவது ராசியில் கேது இருந்தாலும், சனி கிரகம் இருந்தாலும் திருமணம் தடை, தாமதமாகும்.

ஒரு ஆணின் ஜாதகத்தில் ராகு- கேது இருக்கும் ராசிகளுக்கு ஒரு புறம், குருவும், அதற்கு எதிர்புறம் மனைவி கிரகமான சுக்கிரன் இருந்தால் திருமணம் தடை, தாமதமாகும்.


ஒரு பெண்ணின் ஜாதகத்தில் ராகு- கேது இருக்கும் ராசிகளுக்கு ஒரு புறம் ஜாதகியைக் குறிப்பிடும் சுக்கிரன் இருந்து அதற்கு எதிர்புற ராசிகளில் கணவனைக் குறிக்கும் செவ்வாய் இருந்தால் அவளுக்கு திருமணம் தடை, தாமதமாகும்.

பெண் ஜாதகத்தில் கணவனைக் குறிக்கும் செவ்வாய் இருக்கும் ராசிக்கு 1, 5, 9, 7, 2, 12-ஆவது ராசிகளில் ஏதாவது ஒன்றில் சனி கிரகம் இருந்தால், அவளுக்கு திருமணம் தடை, தாமதமாகும்.

தடை, தாமதத்திற்கு கிரகங்கள் சுட்டிக் காட்டுவது விதியா? வினையா? என்பதை ஆய்வுசெய்து சரியான- முறையான பரிகாரங் களைச் செய்தால் தீமைகளைத் தடுத்துக் கொள்ளலாம்.

செல்: 93847 66742

கந்தர்வநாடி ஜோதிடர்
**லால்குடி கோபாலகிருஷ்ணன்**



"மேனிதான் அறவும் துய்யன் வெள்ளீய கோபம் செய்யும்
கானிடைத் திரிய வேண்டிக் கருதுவான் பிறரை எண்ணி
மானிடமில்லை மேன்மேல் மனக்கன முடையனாகும்
ஊனமில் திரண்ட கோங்கை உரோகிணி நாளினாளே".

–மதன நூல்

***பொருள்:*** ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவள், அழகான உடலும், பிறரை கவர்ந்திழுக்கும் பார்வையும் உடையவள். ஆனாலும், முன்கோபத்தால் பகை வளர்ப்பாள்.

பாகனுக்கு அடங்காத யானை மதம் பிடித்து படுகுழியில் வீழ்வதுபோல் புத்திக்கு அடங்காத மனம், ஒரு மனிதனை மீளாத துயரத்தில் தள்ளிவிடும். மனதை ஆட்டிப் படைக்கும் சந்திரன் அமைந்த நட்சத்திரத் திற்கும், அறிவொளியைத் தரும், சூரியன், புதன் அமைந்த நட்சத்திரத்திற்குமுள்ள தாரா பலனே, ஒருவரின் ஆசைக்கும், ஆற்ற லுக்குமுள்ள இடைவெளியைக் காட்டும். கிரகங்களும், பாவங்களும் அமைந்த நட்சத்திர பாதங்களே ஒருவரின் வாழ்க்கைப் பாதையைக் காட்டும்.

***ரோகிணி நட்சத்திரத்தின் சிறப்பு:*** சனிக்கிழமையும் ரோகிணி நட்சத்திரமும் கூடும்நாளில் பிறந்தவர்கள், சாதனை படைப்பார்கள்.

## ரோகிணி நட்சத்திரத்தின் வலிமை

- அமைதியான வாழ்க்கையை விரும்பு வதால், வீண் வம்புக்கு போகமாட்டார்கள்.
- கலைத்துறையில் ஜொலிப்பார்கள். எந்த ஒரு கலையையும் எளிதாக கற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள்.
- இனிமையாக பேசக்கூடிய இவர்கள், பகைவர்களைக்கூட நண்பர்களாக்கிக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள்.

## ரோகிணி நட்சத்திரத்தின் பலவீனம்

- ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சுகபோகங்களை விரும்புவார்கள். அதனால், கடன் தொல்லையில் மாட்டிக்கொள்ள வாய்ப்புண்டு.
- பெண் பிரியர்களாகவும் இருப்பதால், காதல் தோல்வி உண்டாகும்.

## கூட்டு கிரகப் பலன்

**(ரோகிணி நட்சத்திரத்தில் அமர்ந்த சந்திரனுடன், பிற கிரகங்கள் இணையும் போது உண்டாகும் பலன்களையும் ஆராய வேண்டியது முதன்மையானது.)**

- ரோகிணி நட்சத்திரத்தில் சூரியனிருக்க மரியாதைக்குரியவர். பல மொழிப் புலமை உண்டு.
- செவ்வாய் அமர்ந்திருக்க அதிக காம எண்ணமுடையவர்.
- புதன் அமர்ந்திருக்க குடும்ப பாசம் அதிகமுடையவர்.
- சுக்கிரன் அமர்ந்திருக்க அனைவரிடமும் நட்பாக பழகக் கூடியவர்கள்.
- சனி அமர்ந்திருக்க கடுமையான சொல்லு டையவர். வட்டி தொழிலில் லாபம் உண்டு.
- குரு அமர்ந்திருக்க நினைத்த காரியத்தை முடிக்கக் கூடியவர்கள்.
- ராகு அமர்ந்திருக்க குடும்பத்தில் ஆதரவு இருக்காது.
- கேது அமர்ந்திருக்க கேளிக்கையையும் பொழுதுபோக்கையும் வாழ்க்கையாகக் கொண்டவர்கள்.

### ரோகிணி நட்சத்திரப் பாதப் பலன்

- ரோகிணி நட்சத்திரத்தின் முதல்பாதம், மேஷ நவாம்சம். செவ்வாய் பகவானால் ஆளப் படுகிறது. இந்த பாதத்தில் பிறந்தவர்கள் செல்வந்தர். ஆனாலும் நிலையான மன உறுதியில்லாதவர்.
- ரோகிணி நட்சத்திரத்தின் இரண்டா வது பாதம் ரிஷப நவாம்சம். சுக்கிர பகவானால் ஆளப்படுகிறது. அன்பும், பாசமும் அதிக




முடையவர்கள். அடிக்கடி நோயின் தாக்கத்தால் நிம்மதிக் குறையும்.

● ரோகிணி நட்சத்திரத்தின் மூன்றாவது பாதம் மிதுன நவாம்சம். புதன் பகவானால் ஆளப்படுகிறது. இந்த பாதத்தில் பிறந்தவர்கள் கணித வித்தையில் சிறந்தவர். ஆனாலும், ஆணவத்தால் பகை வளர்ப்பார்.

● ரோகிணி நட்சத்திரத்தின் நான்காவது பாதம் கடக நவாம்சம். சந்திரனால் ஆளப்படுகிறது. இந்த பாதத்தில் பிறந்தவர், தெளிந்த சிந்தனையுடையவர். ஆனாலும் பெண்களால் ஏமாற்றப்படுவார்.

**ரோகிணி நட்சத்திரநாளில் செய்யத்தக்க சுப காரியங்கள்**

● சந்திரன் இடப்பெயர்ச்சிக்கு காரக கிரகம் என்பதால் இந்த நட்சத்திரநாளில் இடப்பெயர்ச்சி, வீடு மாற்றம் செய்யலாம்.

● சந்திரன் கலை, இசை போன்றவற்றுக்கு அதிபதி என்பதால் ரோகிணி நட்சத்திரம் கலை, இசை பயிற்சி போன்றவற்றைத் தொடங்கலாம்.

● ரோகிணி நட்சத்திரத்தன்று அன்ன தானம் செய்தால் பல மடங்கு புண்ணிய பலன்கள் பெருகும்.

**ரோகிணி நட்சத்திரநாளில் செய்யக் கூடாதவை**

● வியாழக்கிழமையும், ரோகிணி நட்சத்திரமும் கூடினால், விஷ யோகம். புதிய தொழில் முயற்சி செய்யக்கூடாது.

**பரிகாரம்**

● ரோகிணி நட்சத்திர தினத்தன்று, காஞ்சிபுரத்திலுள்ள பாண்டவ தூதப் பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபடுவது சிறப்பு.

செல்: 63819 58636

# சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி எங்கு இருந்தால் என்ன நடக்கும்?




சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி லக்னத்தில் இருந்தால், ஜாதகர் நல்லவராக இருப்பார். அறிவாளியாக இருப்பார். நல்ல நண்பர்கள் இருப்பார்கள். பண வசதி இருக்கும். குடும்ப வாழ்க்கை நன்றாக இருக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 2-ஆம் பாவத்தில் இருந்தால், ஜாதகர் நிறைய படித்தவராக இருப்பார். சிலர் வைத்தியராக அல்லது டாக்டராக இருப்பார்கள். சிலர் வியாபாரியாக இருப்பார்கள். சிலர் தர்ம காரியங்களைச் செய்வார்கள். சிலர் தலைமை பீடத்தில் இருப்பார்கள். நல்ல வாரிசு அமையும். நல்ல மனைவி இருப்பாள்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 3-ஆம் பாவத்தில் இருந்தால், தைரிய குணம் இருக்கும். அதிக பயணங்கள் இருக்கும். நல்ல படிப்பு இருக்கும். தர்ம காரியங்களில் ஈடுபாடு இருக்கும். நல்ல வாரிசு இருக்கும். அழகான மனைவி அமைவாள். சீதளம் பிடிக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 4-ஆம் பாவத்தில் இருந்தால், அன்னையால் சந்தோஷம் இருக்கும். வீடு, மனை, வாகனம் இருக்கும். இல்வாழ்க்கையில் சில பிரச்சினைகள் இருக்கும். சிலருக்கு தாமதமாக திருமணம் நடக்கும்.



சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 5-ஆம் பாவத்தில் இருந்தால், பெரிய பதவி இருக்கும். நல்ல படிப்பு இருக்கும். நல்ல வாரிசு இருக்கும். சிலர் ஆலோசகர்களாக இருப்பார்கள். பெண்களுக்கு வயிற்றில் நோய் இருக்கும். சிலர் உயர்ந்த அரசு அதிகாரியாக இருப்பார்கள்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 6-ஆம் பாவத்தில் இருந்தால், வலது காலில் நோய் இருக்கும். நல்ல படிப்பு இருக்கும். நல்ல மனைவி அமைவாள். கனமான சரீரம் இருக்கும். சிலர் நல்ல வியாபாரியாக இருப்பார்கள். நல்ல வாரிசு இருக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 7-ஆம் பாவத்தில் இருந்தால், ஜாதகர் துணிச்சல் குணம் கொண்டவராக இருப்பார். யாரையும் நம்பமாட்டார். சிலருக்கு மறுமணம் நடக்கும். நல்ல படிப்பு இருக்கும். பல தொழில்கள் இருக்கும். சிலர் தொழிலை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். மனைவியுடன் அவ்வப்போது விவாதம் நடக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 8-ஆம் பாவத்தில் இருந்தால், இளமையில் உடல்நல பாதிப்பு இருக்கும். மனச் சிக்கல்கள் இருக்கும். தீவிர ஜுரம் வரும். வாழ்க்கையின் பிற்பகுதி நன்றாக இருக்கும். நல்ல பணவசதி இருக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 9-ஆம் பாவத்தில் இருந்தால், பூர்வீக சொத்து கிடைக்கும். பண வசதி இருக்கும். ஆணவ குணம் இருக்கும். தர்ம காரியங்களில்

மகேஷ் வர்மா

ஈடுபாடு இருக்கும். அதற்காக ஜாதகர் பணத்தைச் செலவழிப்பார். நல்ல படிப்பு இருக்கும். நல்ல வாரிசு அமையும். பயணங்கள் இருக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 10-ஆம் பாவத்தில் இருந்தால், சிலர் அரசியல்வாதியாக இருப்பார்கள். சிலர் தர்ம குருவாக இருப்பார்கள். சிலர் நீதிபதியாக இருப்பார்கள். சிலர் மருத்துவர்களாக இருப்பார்கள். ஜாதகர் பணக்காரராக இருப்பார். யாரையும் நம்பமாட்டார். பலரால் ஏமாற்றப்படுவார். பெயர், புகழ் இருக்கும். சந்தோஷமான வாழ்க்கை இருக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 11-ஆம் பாவத்தில் இருந்தால், ஜாதகர் பண வசதி உள்ளவராக இருப்பார். நிறைய படித்தவராக இருப்பார். நல்ல தொழில் இருக்கும். நல்ல வாரிசு இருக்கும். நல்ல மனைவி அமைவாள். சந்தோஷமான வாழ்க்கை இருக்கும். சீதளம் பிடிக்கும்.

சந்திரன், செவ்வாய், புதன், குரு, சனி 12-ஆம் பாவத்தில் இருந்தால், இளமையில் சில பிரச்சினைகள் இருக்கும். ஜாதகர் நன்கு சாப்பிடுவார். திருமண வாழ்க்கையில் பல சிக்கல்கள் இருக்கும். ஜாதகர் அதர்ம செயல்களில் ஈடுபடுவார். பிறரிடம் வாங்கிச் சாப்பிடும் பழக்கம் ஜாதகருக்கு இருக்கும்.

செல்: 98401 11534

## இந்த வாரத்தில் அனுகூலமான

# நாளும் நேரமும்

**15-6-2025 முதல் 21-6-2025 வரை**

**மேஷம், ரிஷபம், துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கு:**

| | |
|---|---|
| 15-6-2025: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 16-6-2025: | பகல் 12.00-1.00, மாலை 3.00-4.00 |
| 17-6-2025: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 18-6-2025: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 19-6-2025: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |
| 20-6-2025: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |
| 21-6-2025: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |

**மிதுன ராசிக்காரர்களுக்கு:**

| | |
|---|---|
| 16-6-2025: | மாலை 3.00-4.00 |
| 17-6-2025: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 18-6-2025: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 19-6-2025: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |
| 20-6-2025: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |
| 21-6-2025: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |

**கடக ராசிக்காரர்களுக்கு:**

| | |
|---|---|
| 15-6-2025: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 16-6-2025: | பகல் 12.00-1.00 |
| 19-6-2025: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |
| 20-6-2025: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |
| 21-6-2025: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |

**சிம்ம ராசிக்காரர்களுக்கு:**

| | |
|---|---|
| 15-6-2025: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 16-6-2025: | பகல் 12.00-1.00, மாலை 3.00-4.00 |
| 17-6-2025: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 18-6-2025: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 21-6-2025: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |

**கன்னி ராசிக்காரர்களுக்கு:**

| | |
|---|---|
| 15-6-2025: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 16-6-2025: | பகல் 12.00-1.00, மாலை 3.00-4.00 |
| 17-6-2025: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 18-6-2025: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 19-6-2025: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |
| 20-6-2025: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |

# மங்கையருக்கான வரனில் நன்மை பயக்கும் நட்சத்திரங்கள் எவை?

கடுக்கரை-
**மா. ஆறுமுகப் பெருமாள்**



**"அன்பான மனைவி, அழகான துணைவன், துணைவி, கிடைத்தாலே பேரின்பமே."**

***சா***ஸ்திரத்தின் வாயிலாக மங்கையர்கள் பொருத்தமான வரனை தேர்வுசெய்வது எவ்வாறு.

இது 27 நட்சத்திரத்திற்கு பொதுவான நட்சத்திர தேர்வு எவ்வாறு என்பதுதான். இத்து டன் பகையோனியும் தரப்பட்டுள்ளது. (ரச்சு, சந்தான பாக்கியம், இல்லற சுகம், பணவரவு, பாக்கிய ஸ்தானம் வேலை வாய்ப்பு, வயோதிகம் சார்ந்த பலன் தரப் படவில்லை.) அது பெரிய செய்தி.

பெண்களுக்கான 27 நட்சத்திரங்களின் முதல் தர (பர்ஸ்ட் கிரேட்) வரன். **மணமகன்**

### 1. அஸ்வினி

பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், சுவாதி, விசாகம், பூராடம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி ஆகியவை.

- **அஸ்தம்- சுவாதி பகை யோனி**

### 2. பரணி

அஸ்வினி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம் ஆயில்யம், சுவாதி, விசாகம், உத்திராடம், திருவோணம்.

- **அவிட்டம்- பூரட்டாதி பகையோனி**

### 3. கார்த்திகை

அஸ்வினி, பரணி, மிருக சீரிடம், பூசம், ஆயில்யம், பூரம், சித்திரை அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம் சதயம், உத்திரட்டாதி.

- பூராடம்- பகையோனி. ஆயில்யம்- வதவை நாசிகம்

## 4. ரோகிணி

அஸ்வினி, பரணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், அனுஷம், கேட்டை, அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி.

- மகம்- பூரம் பகையோனி.

## 5. மிருகசீரிஷம்

அஸ்வினி, கார்த்திகை, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயில்யம், உத்திரம், அஸ்தம், சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, உத்திராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி.

- மகம்- பூரம் பகையோனி

## 6. திருவாதிரை

பரணி, கிருத்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூரம், உத்திரம், சித்திரை, பூராடம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி.

- அனுஷம்- கேட்டை பகையோனி

## 7. புனர்பூசம்

பரணி, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, பூராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி.

- மகம்- பூரம் பகையோனி

## 8. பூசம்

அஸ்வினி, கிருத்திகை, ரோகிணி, புனர்பூசம், ஆயில்யம், உத்திரம், அஸ்தம், சுவாதி, உத்திராடம், பூரட்டாதி, ரேவதி.

- திருவோணம்- பகையோனி



## 9. ஆயில்யம்

பரணி, கிருத்திகை, புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம்.

- பூரம்- பகையோனி

## 10. மகம்

பூசம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், அவிட்டம், சதயம்.

- ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம்- பகையோனி

உத்திரம்- கணப் பொருத்தம் இருக்காது.

விசாகம்- வதவை நாசிகம். வேண்டாம்.

- உத்திராடம்- கணப் பொருத்தம் இருக்காது.

## 11. பூரம்

அஸ்வினி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், மகம், உத்திரம், விசாகம், கேட்டை, ரேவதி.

- பகையோனி- ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம்; ஆயில்யம், இவையாவும் பொருந்தாது.

## 12. உத்திரம்

பரணி, மிருகசீரிடம், பூசம், மகம், பூரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், பூராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி.

- சித்திரை- நாலு பாதமும் பகையோனி

## 13. அஸ்தம்

மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், ஆயில்யம், உத்திரம், சித்திரை, அனுஷம், பூராடம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி.

- அஸ்வினி- பகையோனி
- மூலம்- வதவை நாசிசம்

**சென்ற 13-6-2025 இதழில் இடம்பெற்ற 12 ராசிக்காரர்களுக்கு எந்தெந்த மாதத்தில் திருமண வரன் அமையும் கட்டுரையில் விருச்சிக ராசி விடுபட்டுப் போனது. விடுபட்ட தகவல் இங்கே...**

### விருச்சிகம்

திருமணம் நடைபெறும்- **மாதம்:** வைகாசி, ஆனி, கார்த்திகை.

**வரன் திசை:** தெற்கு, வடக்கு.

**மணநாள்:** ஞாயிறு, வெள்ளி,

**நேரம்:** காலை 6.00 மணிமுதல் 10.30 மணிவரை.

**வரன் நாம எழுத்து** L.W.H.V ஆகியவை.

**-தவறுதலுக்கு வருந்துகிறோம்.**

## 14. சித்திரை

அஸ்வினி, கார்த்திகை, திருவாதிரை, புனர்பூசம், ஆயில்யம், மகம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், திருவோணம், சதயம்.

- உத்திரம்- பகையோனி

## 15. சுவாதி

பரணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், சித்திரை, அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், அவிட்டம், சதயம்.

- அஸ்வினி- பகையோனி.

## 16. விசாகம்

அஸ்வினி, பரணி, மிருகசீரிடம் மகம், பூரம், சித்திரை, அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம் சதயம்.

- பூராடம் கணப் பொருத்தம்- இருக்காது.
- திருவோணம்- வதவை நாசிசம்.

## 17. அனுஷம்

அஸ்வினி, கார்த்திகை, ரோகிணி, புனர்பூசம், உத்திரம், அஸ்தம், கேட்டை, உத்திராடம், திருவோணம்.

- திருவாதிரை, மூலம் பகையோனி
- அவிட்டம்- வதவை நாசிசம். பொருந்தாது

## 18. கேட்டை

கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், பூரம், சித்திரை, அனுஷம், அவிட்டம்.

- திருவாதிரை- பகையோனி
- பூராடம்- கணப் பொருத்தம் இருக்காது.

## 19. மூலம்

கார்த்திகை, மிருகசீரிடம், சித்திரை, சுவாதி, விசாகம், அவிட்டம்.

- அனுஷம்- பகையோனி.

## 20. பூராடம்

அஸ்வினி, திருவாதிரை, புனர்பூசம் உத்திரம், சுவாதி, மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி.

- கிருத்திகை- பகையோனி.

## 21. உத்திராடம்

அஸ்வினி, பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி.

- சித்திரை- பகையோனி

## 22. திருவோணம்

அஸ்வினி, பரணி, மிருகசீரிடம், புனர்பூசம், உத்திரம், சித்திரை, கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி.

- கிருத்திகை, பூசம்- பகையோனி

## 23. அவிட்டம்

கார்த்திகை, ரோகிணி, புனர்பூசம், ஆயில்யம், மகம், சுவாதி, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி.

- பரணி, ரேவதி- பகையோனி

## 24. சதயம்

கார்த்திகை, மிருகசீரிடம், மகம், சித்திரை, விசாகம், மூலம், பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி.

## 25. பூரட்டாதி

ரோகிணி, மிருகசீரிடம், பூரம், சுவாதி, அனுஷம், பூராடம், திருவோணம், அவிட்டம்.

- பரணி, ரேவதி பகையோனி

## 26. உத்திரட்டாதி

அஸ்வினி, கார்த்திகை, ரோகிணி, புனர்பூசம், உத்திரம், அஸ்தம் மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி.

- சித்திரை, விசாகம்- பகையோனி

## 27. ரேவதி

பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், அஸ்தம், பூராடம், உத்திராடம், திருவோணம் உத்திராடம்.

- அவிட்டம், பூரட்டாதி- பகையோனி

(ஏகரச்சு சார்ந்த விவரம் தரப்படவில்லை; கவனத்தில் கொள்ளவும்.)

செல்: 93801 73464

எப்பொழுது P.hd பட்டம் பெற்று வெளிநாட்டில் வேலை கிடைக்கும்? எப்போது திருமணம் நடைபெறும்? பரிகாரம் என்ன செய்யவேண்டும்?

**-ராமு, திண்டுக்கல்.**

| | | | |
|---|---|---|---|
| கேது சனி | | | |
| சந்திரன் சுக்கிரன் சூரியன் புதன் | ராசி | | |
| குரு | | | |
| மாந்தி | | | 1-லக்னம் செவ்வாய் (வ) ராகு |

*அவிட்ட நட்சத்திரம், கும்ப ராசி, கன்னி லக்னத்தில் பிறந்த உங்களுக்கு 9, 10-க்கு அதிபதியான சுக்கிரன்-புதனுடன் இணைந்து 6-ல் இருக்கும்பொழுது பிறந்து உள்ளீர்கள். தற்போது குரு தசையில் சுக்கிர புக்தி 14-7-2027*



முடிய நடக்கிறது. சுக்கிரன் 9-ஆம் அதிபதி என்பதால் முனைவர் பட்டத்திற்கான முயற்சிகளில் தற்போது தீவிரமாக முயற்சித்தால் அடுத்து வரும் ஆண்டில் அதனை முழுமையாக முடிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டாகும். உங்களுக்கு ராகு லக்னத்தில் இருந்தாலும் பாவகரீதியாக 12-ல் உள்ளார். உங்கள் ஜாதகத்தில் 9, 12-க்கு அதிபதியான சுக்கிரனும் சூரியனும் இணைந்து உடன் சந்திரன், புதன் ஆகிய கிரகங்கள் இருப்பதால் எதிர்காலத்தில் வெளிநாடு முயற்சிகள் மேற்கொண்டால் கைகூடக்கூடிய வாய்ப்புகள் உண்டு. சுக்கிர புக்தி நடப்பதால் திருமண முயற்சிகள் மேற்கொண்டால் விரைவில் நல்லது நடக்க வாய்ப்புண்டு. 7-ஆம் அதிபதி நீசம்பெற்று பரிவர்த்தனை பெற்றிருப்பதால் ஒரு தடைக்குப் பிறகு அனுகூலங்கள் நடக்கும். குலதெய்வ வழிபாடு மேற்கொள்வது நல்லது.

**எனது மகளுக்கு எப்பொழுது குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று தெரிவிக்கவும்?**

**-சாந்தி, திருச்சி.**

கிருத்திகை நட்சத்திரம், ரிஷப ராசி, கடக லக்னத்தில் பிறந்த உங்கள் மகளுக்கு புத்திரகாரகன் குரு 7-ல் அமையப் பெற்று 7-ஆம் அதிபதி சனி 9-ல் அமையப் பெற்று 7, 9 பரிவர்த்தனை பெற்றிருக்கிறது. குரு நீசம்பெற்று பரிவர்த்தனை பெற்றிருப்பதால் குழந்தை பாக்கிய விஷயத்தில் முதலில் சில தடை, தடைக்குப்பிறகு அனுகூலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| சனி (வ) | | சந்திரன் | |
| கேது | ராசி | | 1-லக்னம் |
| குரு | | | ராகு மாந்தி |
| செவ்வாய் சுக்கிரன் | புதன் | சூரியன் | |

உங்கள் மகளுக்கு தற்போது ராகு தசையில் சனி புக்தி 15-12-2026 முடிய நடக்கிறது. 2027 தொடக்கத்தில் 5-ல் உள்ள புதன் புக்தி நடக்கும் சமயத்தில் குழந்தை பாக்கியத்திற்கான யோகங்கள் உண்டு. தற்போது ராகு தசை நடப்பதால் அம்மன் வழிபாடு, துர்க்கை வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

**இந்த ஜாதகருக்கு திருமணம் எப்பொழுது நடைபெறும்? பரிகாரம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள்?**

**ஜே. வடிவேலன், புதுச்சேரி.**

பூச நட்சத்திரம், கடக ராசி, விருச்சிக லக்னத்தில் பிறந்த ஜாதகருக்கு 7-ஆம் அதிபதி சுக்கிரன் 8-ல் மறைந்து சனி பார்வை பெற்றதால் திருமணம் தாமதமாகியது. அடுத்து திருமண வயது காலத்தில் 2015 முதல் 2018 வரை புதன் தசையில் சனி புக்தி நடந்ததும், 2018 ஜனவரிமுதல் 2025 ஜனவரிவரை கேது தசை நடைபெற்றதாலும் திருமணம் நடைபெற இடையூறுகள் ஏற்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | செவ்வாய் | | சுக்கிரன் |
| | ராசி | | சூரியன் புதன் குரு சந்திரன் கேது |
| ராகு | | | |
| சனி (வ) மாந்தி | 1-லக்னம் | | |

தற்போது சுக்கிர தசையில் சுக்கிர புக்தி நடப்பதால் திருமண முயற்சிகளைத் தீவிரமாக செய்தால் விரைவில் நல்லது நடக்க வாய்ப்புண்டு. ஜாதகத்தில் சூரியன், சந்திரன், கேது சேர்க்கைப் பெற்றிருப்பதாலும், சுக்கிரன்- ராகு சாரம் பெற்றிருப்பதாலும் சொந்தமில்லாமல் அந்நியத்தில் வரன் பார்ப்பது, அம்மன் வழிபாடு, துர்க்கை வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

●

நக்கீரன் பப்ளிகேஷனுக்காக நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை—600 014.—ல் அச்சிட்டு வெளியிடுபவர் : நக்கீரன்கோபால்
ஆசிரியர் : ஆர். பாலமுருகன்
Owned by Nakkheeran Publications, Printed and Published by **Nakkheeran Gopal.** Printed at Nakkheeran Printers and Binders, 105, Jani jahan khan road, Royapettai, Chennai-14. and Published from the same address. Phone: 43993000
Editor: **R.Balamurugan**


இப்போது விற்பனையில்...
பிரபல 'வாஸ்து மேதை'
டாக்டர் BRB. ஒளிமுத்து ஜி
எழுதிய
100%
வளமான வாழ்வுக்கு வழிகாட்டும்
வாஸ்து!
இலவச
தனிப்புத்தகம்
வாஸ்து குறைபாடுகளினால்
ஏற்படும் பாதிப்புகள் குறைவதற்கான
டிப்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது!
ஓம்
சரவணபவ
ஆன்மிக மாத இதழ்
ஜூன் 2025 ரூ.40
Advt

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai 600 008. Date of Publication on posting Every Friday.
Balajothidam-Enngal, Tamil Weekly Regd No:TN/CH(C)/11/2024-2026 RNI NO: 42635/84

# பஞ்சாங்க ஆன்மிகக் குறிப்புகள்!

| தேதி கிழமை | திதி | நட்சத்திரம் | அமிர்தாதி யோகம் | சூலம் பரிகாரம் | யோகினி | நாள் | ராகு காலம் | எம கண்டம் | நல்ல நேரம் | விரதம் விசேஷம் | செயல் குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15-6-2025 ஆனி 1 ஞாயிறு | மாலை 3.51 வரை சதுர்த்தி பின் (தே) பஞ்சமி | பின்னிரவு 1.00 வரை திருவோணம் பின் அவிட்டம் | பின்னிரவு 1.00 வரை அமிர்தயோகம் பின் மரணயோகம் | மேற்கு, இனிப்பு. | மாலை 3.51 வரை ஆகாயம் பின் பூமி | நாள் முழுவதும் மேல்நோக்கு நாள் | மாலை 4.30-6.00 | காலை 12.00-1.30 | காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 1.30-2.00 மாலை 4.00-4.30 | ஹயக்ரீவருக்கு உகந்த நாள். | கரி நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 16-6-2025 ஆனி 2 திங்கள் | மாலை 3.32 வரை பஞ்சமி பின் (தே) சஷ்டி | பின்னிரவு 1.13 வரை அவிட்டம் பின் சதயம் | நாள் முழுவதும் சித்தயோகம் | கிழக்கு, தயிர். | மாலை 3.32 வரை பூமி பின் கிழக்கு | நாள் முழுவதும் மேல்நோக்கு நாள் | காலை 7.30-9.00 | காலை 10.30-12.00 | காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 12.00-2.00 மாலை 4.30-5.30 | | சுபமுகூர்த்த நாள். சுபமுயற்சிகளைச் செய்ய ஏற்ற நாள். |
| 17-6-2025 ஆனி 3 செவ்வாய் | பகல் 2.47 வரை சஷ்டி பின் (தே) சப்தமி | இரவு 1.01 வரை சதயம் பின் பூரட்டாதி | நாள் முழுவதும் மரணயோகம் | வடக்கு, பால். | பகல் 2.47 வரை கிழக்கு பின் வடக்கு | பின்னிரவு 1.01 வரை மேல்நோக்கு நாள் பின் கீழ்நோக்கு நாள் | மாலை 3.00-4.30 | காலை 9.00-10.30 | காலை 7.30-8.30 மதியம் 12.00-1.00 மாலை 4.30-5.30 | சஷ்டி விரதம். முருக வழிபாடு உத்தமம். | புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 18-6-2025 ஆனி 4 புதன் | பகல் 1.35 வரை சப்தமி பின் (தே) அஷ்டமி | இரவு 12.23 வரை பூரட்டாதி பின் உத்திரட்டாதி | இரவு 12.23 வரை அமிர்தயோகம் பின் சித்தயோகம் | வடக்கு, பால். | பகல் 1.35 வரை வடக்கு பின் தென்கிழக்கு | இரவு 12.23 வரை கீழ்நோக்கு நாள் பின் மேல்நோக்கு நாள் | மதியம் 12.00-1.30 | காலை 7.30-9.00 | காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 2.00-3.00 மாலை 4.30-6.00 | பைரவர் வழிபாடு உத்தமம். | புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 19-6-2025 ஆனி 5 வியாழன் | பகல் 11.56 வரை அஷ்டமி பின் (தே) நவமி | இரவு 11.17 வரை உத்திரட்டாதி பின் ரேவதி | நாள் முழுவதும் சித்தயோகம் | தெற்கு, எண் ணெய். | பகல் 11.56 வரை தென்கிழக்கு பின் தென்மேற்கு | இரவு 11.17 வரை மேல்நோக்கு நாள் பின் சமநோக்கு நாள் | மதியம் 1.30-3.00 | காலை 6.00-7.30 | காலை 7.30-9.30 10.30-11.30 மதியம் 12.00-1.30 மாலை 4.00-6.00 | | புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 20-6-2025 ஆனி 6 வெள்ளி | காலை 9.50 வரை நவமி பின் (தே) தசமி | இரவு 9.45 வரை ரேவதி பின் அஸ்வினி | இரவு 9.45 வரை சித்தயோகம் பின் அமிர்தயோகம் | மேற்கு, இனிப்பு. | காலை 9.50 வரை தென்மேற்கு பின் தெற்கு | நாள் முழுவதும் சமநோக்கு நாள் | காலை 10.30-12.00 | மாலை 3.00-4.30 | காலை 6.00-7.30 9.30-10.30 மதியம் 1.00-3.00 மாலை 4.30-5.30 | அம்மன் வழிபாடு உத்தமம். | கரி நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 21-6-2025 ஆனி 7 சனி | காலை 7.19 வரை தசமி பின் பின்னிரவு 4.28 வரை ஏகாதசி பின் (தே) துவாதசி | இரவு 7.50 வரை அஸ்வினி பின் பரணி | நாள் முழுவதும் சித்தயோகம் | கிழக்கு, தயிர். | காலை 7.19 வரை தெற்கு பின் பின்னிரவு 4.28 வரை மேற்கு பின் வடமேற்கு | இரவு 7.50 வரை சமநோக்கு நாள் பின் கீழ்நோக்கு நாள் | காலை 9.00-10.30 | மதியம் 1.30-3.00 | காலை 7.30-8.30 மதியம் 10.30-12.30 மாலை 4.30-5.30 | ஏகாதசி விரதம். பெருமாள் வழிபாடு உத்தமம். | ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |